# TNPSC போட்டி தேர்வுக்கான
# நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி -2019

# சென்னை ஐஏஸ் அகாடமி

## வேலூர் மற்றும் திருவண்ணாமலை

## தமிழ் தொகுப்பு

CHENNAI IAS ACADEMY

**www.chennaiiasacademy.com**

**chennaiiasacademy**

***Contact : 9043 211 311 / 411***

# நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2019

## CONTENT


| வரிசை எண் | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|
| 1. | தமிழகம் | 03 – 10 |
| 2. | தேசியம் | 10 – 34 |
| 3. | சர்வதேசம் | 35 – 38 |
| 4. | அறிவியல் & தொழில்நுட்பம் | 38 – 42 |
| 5. | நியமனம் | 42 – 46 |
| 6. | மாநாடுகள் | 46 – 49 |
| 7. | விருதுகள் | 50 – 56 |
| 8. | பொருளாதாரம் | 57 – 60 |
| 9. | சுற்றுச்சூழல்கள் | 60 – 61 |
| 10. | விளையாட்டுகள் | 62 – 68 |
| 11. | முக்கியதினங்கள் | 69 - 72 |


CHENNAI IAS ACADEMY

# தமிழ்நாடு

## ➢ தமிழ்நாடு வாக்காளர் பட்டியல் வெளியீடு 2019

- தமிழ்நாடு முழுவதும் இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 31 அன்று வெளியிடப்பட்டது.
- தமிழகத்தில் மொத்தம் 5 கோடியே 91 லட்சத்து 23,197 வாக்காளர்கள் உள்ளனர்.
- 2.92 கோடி ஆண் வாக்காளர்கள்
- 2.98 கோடி பெண் வாக்காளர்கள்
- 5,472 மூன்றாம் பாலினத்தவர்.
- அதிக வாக்காளர் கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர்
- தமிழகத்தில் அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. இதில் 6,18,695 வாக்காளர்கள் உள்ளனர்.
- குறைந்த வாக்காளர்கள் கொண்ட தொகுதி துறைமுகம், சென்னை
- தமிழகத்தில் குறைந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சென்னை துறைமுகம் அமைந்துள்ளது. இதில் 1,66,515 வாக்காளர்கள் உள்ளனர்.
- 18 முதல் 19 வயதுள்ள இளம் வாக்காளர்களை அதிகம் கொண்ட தொகுதியாக திருப்பரங்குன்றம் உள்ளது.
- சென்னையில் மொத்தம் 38,18,999 வாக்காளர்கள் உள்ளனர். இந்த வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி அலுவலகங்களிலும், மாவட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் மொத்தம் 38,18,999 வாக்காளர்கள் உள்ளனர்.
- சென்னையில் அதிக வாக்காளர் கொண்ட தொகுதியாக வேளச்சேரி உள்ளது. இதில் 2,96,952 வாக்காளர்கள்
- சென்னையில் குறைந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சென்னை துறைமுகம் அமைந்துள்ளது. இதில் 1,66,515 வாக்காளர்கள் உள்ளனர்.

## ➢ மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை – அடிக்கல் நாட்டு விழா

- தமிழ்நாட்டின் மதுரை தோப்பூரில் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக-எய்ம்ஸ் மருத்துவமனை (AIMS) அமையவுள்ளது.
- 2019 ஜனவரி 27 அன்று இதற்கான அடிக்கல் நாட்டு விழா மதுரை மண்டேலா நகரில் நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று ரூ.1,264 கோடி செலவில் அமையும் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 'ரிமோட்' மூலம் கல்வெட்டை திறந்து, எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

CHENNAI IAS ACADEMY

- மதுரை, எய்ம்ஸ் மருத்துவமனையில் 750 படுக்கை வசதி, 100 எம்.பி.பி.எஸ். கல்வி இடங்கள், பல்வேறு உயர்தர சிகிச்சை பிரிவுகள் இந்த எய்ம்ஸ் மருத்துவமனையில் அமைய உள்ளன.
- மதுரை, நெல்லை, தஞ்சையில் கட்டப்பட்டுள்ள 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' ஆஸ்பத்திரிகளையும் அவர் திறந்து வைத்தார்.

### ➢ போலீஸ் இ-ஐ செயலி:

- ❖ பொதுமக்கள் போக்குவரத்து மீறல்களைப் பற்றி புகார் தெரிவிப்பதற்காகவும் அதனை சரிபார்ப்பதற்காகவும் கோயம்புத்தூரின் நகரப் போக்குவரத்து காவல் துறையினர் போலீஸ் இ-ஐ (Police-E-Eye) எனும் செயலியைத் தொடங்கியுள்ளனர்.
- ❖ இந்தச் செயலியானது ஏவியோன் இன்போடென் பி லிட்-ஆல் அதன் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ இதன்மூலம் விதிமீறல்களின் புகைப்படங்களை GPS உதவியுடன் நேரம், தேதி மற்றும் இடம் ஆகியவற்றுடன் அனுப்ப முடியும்.

### ➢ இயந்திர காவல்துறை பணியாள் 'Rodeo'

- ❖ வேப்பேரியில் உள்ள சென்னைப் போக்குவரத்து காவல்துறை அலுவலகத்தில் உள்ள சாலைப் பாதுகாப்பு காட்சிக் கூடத்தில் சென்னை மாநகர காவல்துறை ஆணையரால் ரோடியோ (Rodeo) என்ற இயந்திர காவல்துறை பணியாள் ரோபோ துவக்கி வைக்கப்பட்டது.
- ❖ SP ரோபோட்டிக் வொர்க்ஸ் என்ற குழுமத்திலிருந்து 23 குழந்தைகள் அடங்கிய ஒரு அணி இந்த ரோபாவை வடிவமைத்திருக்கின்றது.
- ❖ இந்த ரோபோ பார்வையாளர்களைச் சந்திக்கும் வகையில் சுழன்று வருவது மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை அளிப்பது போன்ற பலதரப்பட்ட செயல்களைச் செய்யும்.

### ➢ உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019-தகவல் தொகுப்பு

- தமிழ்நாடு அரசின் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 ஜனவரி 23-24 தேதிகளில், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது.
- இம்மாநாட்டில் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தொழில் துறையில் ரூ.3 லட்சத்து 431 கோடி முதலீடு செய்யப்படஉள்ளது.
- 10 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.
- புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் புகழ் பெற்ற வெளிநாட்டு நிறுவனங்களான ஜப்பான், கொரியா, தைவான், ஜெர்மனி, பிரான்ஸ், பின்லாந்து, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் நிறுவனங்களின் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டு உள்ளன.

CHENNAI IAS ACADEMY

## ➢ உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015

- 2015-ம் ஆண்டு செப்டம்பர் 9,10-ந் தேதிகளில் முதலாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

## ➢ எம்.ஜி.ஆர் பிறந்த ஆண்டு நினைவு நாணயங்கள்

- ❖ 100 ரூபாய் மற்றும் 5 ரூபாய் என்ற பிரிவுகளில் இரண்டு நினைவு நாணயங்கள் மறைந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் M.G. ராமச்சந்திரனின் 102-வது பிறந்த ஆண்டு விழாவை அனுசரிப்பதற்காக வெளியிடப்பட்டு இருக்கின்றது.
- ❖ பிறந்த நாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, புகழ்பெற்ற மெரினா கடற்கரையில் உள்ள காமராஜர் சாலையின் குறுக்காக 66 அடி அகலமும், 52 அடி உயரமும் கொண்ட டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு வளைவும் திறந்து வைக்கப்பட்டது.

## ➢ புதிய நெல் வகை

- ❖ ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனமானது (The Tamil Nadu Rice Research Institute – TRRI) குறுகிய காலத்தில் வளர்ச்சியடையக் கூடிய ADT 53 என்ற நெல் வகையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ ADT-53 வகையானது ADT-43/JGL-384 ஆகியவற்றின் கலப்பு வகை ஆகும்.

## ➢ BBBP திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு விருது

- ❖ புது டெல்லியில் நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் தமிழ்நாடு மாநில அரசானது மத்திய அரசின் பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் (Beti Bachao Beti Padhao- BBBP) சிறந்த செயல்பாட்டிற்காக 2 விருதுகளைப் பெற்றுள்ளது.
- ❖ தமிழ்நாடானது BBBP திட்டத்தில் ஒட்டுமொத்த ஒத்துழைப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் இலக்கை அடைதல் ஆகிய பிரிவுகளில் சிறந்த செயல்பாட்டிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ❖ மேலும் தமிழகமானது BBBP திட்டத்திற்கென தமிழ்மொழியில் வழிகாட்டும் புத்தகமொன்றை வெளியிட்டதற்காகவும் ஒரு பரிசினை வென்றது.
- ❖ செயல்திறன் வாய்ந்த சமூக மேலாண்மைப் பிரிவில் மாவட்ட அளவிலான விருதிற்கு திருவண்ணாமலை மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது.

## ➢ அப்போலோ புரோட்டான் புற்றுநோய் மையம்

- ❖ இந்தியாவானது தமிழ்நாட்டின் சென்னையில் அப்போலோ புரோட்டான் புற்றுநோய் மையத்தினை தொடங்கியுள்ளது.
- ❖ இதன்மூலம் இந்தியாவானது புற்றுநோய்க்கு புரோட்டான் தெரபி சிகிச்சையை வழங்கும் 16-வது நாடாக மாறியுள்ளது.

CHENNAI IAS ACADEMY

- ❖ இந்த மையமானது புரோட்டான் தெரபி சிகிச்சையை உயர் துல்லியத் தன்மையை வழங்கும் பென்சில் - பீம் தொழில் நுட்பத்துடன் வழங்குகிறது.
- ❖ இந்த கதிர்வீச்சு வடிவத்திலான புரோட்டான் பீம் தெரபி மூலம் புற்றுக்கட்டிகளுக்கு அப்பால் ஜீரோ அளவிலான கதிர்வீச்சு முறை சாத்தியமாகும்.
- ❖ ஈரோடு மாவட்ட வனத்துறையும், தமிழ்நாடு பட்டாம்பூச்சிகள் சங்கமும் இணைந்து முதல்முறையாக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் டிசம்பர் 29 மற்றும் 30 தேதிகளில் பட்டாம்பூச்சிகள் மீதான கணக்கெடுப்பை மேற்கொண்டன.

## ➢ சென்னையில் "மாணவர் காவல் படை" தொடக்கம்

- தமிழகத்தில் முதன் முதலில் சென்னையில் "மாணவர் காவல் படை" தொடங்கப்பட்டுள்ளது.
- சென்னையில் "மாணவர் காவல் படை" ஜனவரி 22 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்திலும், பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களிடம் விழிப்புணர்வையும், நல்ல சிந்தனையையும் வளர்க்கும் வகையில் தமிழக காவல்துறை, வருவாய்த் துறை, பள்ளிக் கல்வித்துறை ஆகியவை இணைந்து மாணவர் காவல் படை என்ற புதிய மாணவர் படையை உருவாக்கியுள்ளன.
- இந்த மாணவர் படையில், சென்னையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 8 மற்றும் 9ம் வகுப்பு படிக்கும், 138 பள்ளிகளைச் சேர்ந்த 6,072 மாணவ-மாணவிகள் இணைந்துள்ளனர்.
- மாணவர் காவல் படைத் திட்டம் மத்திய உள்துறை அமைச்சகத்தினால் 2018 ஜூலை மாதம் அறிமுகம் செய்யப்பட்டது.

## ➢ இந்தியாவின் மிக நீண்ட ரயில்வே சுற்றுப் பாதை

- சென்னை புறநகர் ரயில் சேவை 235.5 கி.மீ. தொலைவு சுற்றுப் பாதையாக வருகிறது. இந்தியாவிலேயே அதிக நீளம் கொண்ட ரயில்வே சுற்றுப் பாதையாக மாறவுள்ளது. தற்போது சென்னை புறநகர் ரயில் சேவை 225.5 கி.மீ. தூரத்திற்கு இயக்கப்படுகிறது.
- தக்கோலம் முதல் அரக்கோணம் வரையிலான அந்த 9.5 கி.மீ. ரயில் பாதை அமைக்கப்பட்டு ரயில்சேவை தொடங்கிவிட்டால் "இந்தியாவிலேயே அதிக நீளம் கொண்ட ரயில்வே சுற்றுப் பாதையாக" மாறும்.
- தற்போதைக்கு கொல்கத்தாவில்தான் இந்தியாவிலேயே மிக நீண்ட ரயில்வே (235 கி.மீ.) சுற்றுப் பாதை உள்ளது.
- 2019 ஜனவரி 25ம் தேதி இப்புதிய வழித்தடத்தில் ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு பிப்ரவரி இறுதியில் சேவை தொடங்க உள்ளது.

CHENNAI IAS ACADEMY

## சேலத்தில் "கால்நடைப் பூங்கா"

- நாட்டு இனக் காளைகளைப் பாதுகாக்க சேலம் மாவட்டத்தில் 1,600 ஏக்கரில் கால்நடைப் பூங்கா அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

## அரசு பள்ளிகளில் LKG,UKG வகுப்புகள் - தொடக்கம்

- தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் இயங்கும் அங்கன்வாடி மையங்களில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. (LKG, UKG) வகுப்புகளை தொடங்குவதற்கான திட்டத்தை சென்னையில் (21.1.2019) முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார்.
- இதன்படி 2,381 அங்கன்வாடி மையங்களில், 52,933 குழந்தைகள் பயன்பெறும் வகையில், எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகளை தொடங்கப்படவுள்ளது.

## தமிழ்நாடு புதிய தொழில் - புத்தாக்கக் கொள்கை – வெளியீடு

- தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் மற்றும் புத்தாக்கத்துக்கான கொள்கையை மாநில அரசு (18.1.2019) வெளியிட்டுள்ளது.
- புதிய தொழில்கள் மற்றும் புத்தாக்கக் கொள்கையின்படி, உலகளாவிய புத்தாக்க மையமாகவும், புதிய தொழில் முனைவோர்களுக்கான மிகச்சிறந்த தேர் விடமாகவும் தமிழகத்தை வரும் 2023-ஆம் ஆண்டுக்குள் உருவாக்குவதும் இலக்காகும்.
- குறைந்தபட்சம் 5 ஆயிரம் புதிய தொழில்களும், 10 உலகளாவிய உயர் வளர்ச்சி புதிய தொழில்கள் உள்பட பல்வேறு தொழில் அம்சங்கள் வளம்பெறும்.
- சென்னை, கோவை, திருச்சி-தஞ்சாவூர், சேலம்-ஈரோடு, திருநெல்வேலி போன்ற பகுதிகள் மாபெரும் புதிய தொழில் மையங்களாக முதலீடுகள் பெற ஊக்குவிக்கப்படவுள்ளது.

## எண்ணூர்-மாமல்லபுரம் இடையே "சென்னை வெளிவட்ட சாலை"

- தமிழ்நாட்டின் எண்ணூர் துறைமுகம், மாமல்லபுரத்தையும் இணைக்கிற வகையில் 133.65 கி.மீ.தொலைவுக்கு சென்னை வெளிவட்ட சாலை அமைக்கப்பட உள்ளது.
- இந்த சென்னை வெளிவட்ட சாலை அமைப்பதற்கு ஜப்பான் ரூ.3,420 கோடி கடன் வழங்குவதற்கான ஒப்பந்தம், டெல்லியில் கையெழுத்தானது.

## திருச்சியில் ISRO ஆய்வு மையம்

- விண்வெளி துறையில் தொடக்க நிலையில் வளர்ந்து வருபவர்களை ஊக்குவிப்பதற்கான ஆய்வு மையங்கள் திருச்சி, நாக்பூர், ரூர்க்கெலா, இந்தூர் நகரங்களில் ஏற்படுத்தப்படும். ஏற்கனவே திரிபுரா மாநிலத்தில் இந்திய விண்வெளி ஆய்வு மையமான ISRO ஆய்வு மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➢ ISRO இளம் விஞ்ஞானிகள் திட்டம்

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் சார்பில் இளம் விஞ்ஞானிகள் திட்டம் (ISRO, Young Scientists programme 2019) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் வாயிலாக இந்தியாவில் உள்ள 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தலா மூன்று மாணவர்கள் வீதம் 108 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். இவர்களுக்கு இஸ்ரோ ஆய்வகத்தில் அறிவியல் திட்டம் தொடர்பாக ஒரு மாதம் பயிற்சி அளிக்கப்படும். இதற்கு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## ➢ சென்னையில் "நவீன வாடகை சைக்கிள் திட்டம்"

- பொதுமக்களிடையே சைக்கிள் ஓட்டும் பழக்கத்தை அதிகரிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் முயற்சியால் 'நவீன வாடகை சைக்கிள் திட்டம்' (Chennai cycle sharing 2019) நடைமுறைக்கு வரவுள்ளது.
- ஐதராபாத்தை சார்ந்த 'ஸ்மார்ட் பைக்' (SmartBike) எனும் நிறுவனத்துடன் இணைந்து சென்னையில் 5ஆயிரம் வாடகை சைக்கிள்களை மாநகராட்சி இயக்கவுள்ளது.
- சென்னையில் உள்ள 300 நிறுத்தங்களில் எங்கு வேண்டுமானாலும் வசதிக்கேற்ப விட்டுச் செல்லலாம். ஒரு மணி நேர வாடகையாக ரூ.5 மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## ➢ தமிழ்நாடு என பெயர் மாற்றப்பட்டு "50 ஆண்டுகள்" நிறைவு

- சென்னை மாகாணம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள், ஜனவரி 14, 1969 ஆகும். தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 50 ஆண்டுகள் (14.01.2019) நிறைவடைந்துள்ளது. (Madras State was renamed 'Tamil Nadu'
- மெட்ராஸ் ஸ்டேட் என்று அழைக்கப்பட்ட தமிழகத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தி விருதுநகரைச் சேர்ந்த காந்தியவாதி தியாகி கண்டன் சங்கரலிங்கனார் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார்.

## ➢ "எழுத்துடை நடுகல்" ஜவ்வாதுமலையில் கண்டுபிடிப்பு

- ஜவ்வாதுமலை, நெல்லிவாசல் நாட்டில் உள்ள நெல்லிப்பட்டு கிராமத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலத்து "எழுத்துடை நடுகல்" ஒன்று கண்ணறியப்பட்டுள்ளது.

## ➢ ஜவ்வாதுமலை (Javadi Hills/Javadhu Hills/Eastern Ghats)

- கிழக்குத் தொடர்ச்சி மலையில் கொல்லிமலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை ஆகியவற்றை அடுத்து வரும் மலைத்தொடரே ஜவ்வாதுமலை ஆகும்.

CHENNAI IAS ACADEMY

- வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரு மாவட்டங்களில் 262 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. ஜவ்வாதுமலை மலைத்தொடரின் சராசரி உயரம் சுமார் 1060 அடி முதல் 1160 அடி வரை ஆகும்.
- **காவனூர் வானியல் ஆராய்ச்சி மையம்,** ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கி மையம் (Vainu Bappu Observatory) இங்குள்ளது.

## ➢ 'நம்ம சென்னை' செயலி: மாநகராட்சி சொத்து வரி செலுத்தும் வசதி அறிமுகம்

- பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்டுள்ள மக்கள் குறை தீர்க்கும் 'நம்ம சென்னை' என்ற செயலி பிறப்பு-இறப்பு சான்றிதழ், சொத்து, தொழில்வரி மற்றும் வர்த்தக உரிமம் ஆகிய 5 சேவைகளுடன் செயல்பாட்டில் உள்ளது.
- தற்போது 'நம்ம சென்னை' செயலியில் கூடுதல் சேவையாக பொதுமக்கள் மேலும் பயன்பெறும் 'நம்ம சென்னை' செயலியில் கூடுதல் சேவையாக பொதுமக்கள் மேலும் பயன்பெறும் வகையில் நெட் பேங்கிங், டெபிட், கிரெடிட் கார்டு, ஆர்.டி.ஜி.எஸ்/நெப்ட், யு.பி.ஐ. ஆகிய கட்டண விருப்பங்களுடன் சொத்துவரி செலுத்தும் முறை (Namma Chennai Apps) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ தமிழ்நாட்டின் 33-வது மாவட்டம் "கள்ளக்குறிஞ்சி"

- தமிழ்நாட்டின் 33-வது மாவட்டமாக "கள்ளக்குறிச்சி" மாவட்டம் உருவாக்கப்படுகிறது.
- சட்டப்பேரவை கூட்டத்தில் 2019 ஜனவரி 8 அன்று கள்ளக்குறிச்சியை தனி மாவட்டமாக அறிவித்து முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாட்டின் 33-வது மாவட்டமாக "கள்ளக்குறிச்சி" உதயமாகிறது.

## ➢ பசுமை எரிசக்தி முயற்சி: தமிழ்நாடு முதலிடம்

- பசுமை எரிசக்தி முயற்சியில் 11,750 மெகாவாட் எரிசக்தி மின் நிறுவு திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

## ➢ அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி, 3 ஆண்டு சிறை தண்டனையால் பதவி இழப்பு

- பொது சொத்துக்கு சேதம் ஏற்படுத்திய வழக்கில் தமிழ்நாடு அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டிக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர் அமைச்சர் பதவியை இழந்தார்.
- 3 ஆண்டு சிறை தண்டனை பெற்றதால், பாலகிருஷ்ண ரெட்டி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 103 மற்றும் 192-ம் பிரிவுகளின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளார்.

CHENNAI IAS ACADEMY

- பாலகிருஷ்ண ரெட்டி, ஓசூர் சட்டசபை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக இருந்தார்.
- பாலகிருஷ்ண ரெட்டி தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.
- பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனுக்கு கூடுதல் பொறுப்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் தடை: ஜனவரி 1,2019 முதல் அமல்

- **சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்** வகையில் **ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக்** பை, கப்புகள் உள்ளிட்ட 14 **வகையான பிளாஸ்டிக் பொருள்களுக்கு ஜனவரி** 1, 2019 தடை விதிக்கப்படும் என உலக சுற்றுச்சூழல் தினமான 2018 **ஜூன்** 5-ஆம் தேதி தமிழ்நாடு அறிவித்தது.

# இந்திய நிகழ்வுகள்

## ஊழல் நாடுகள் பட்டியல்: இந்தியாவுக்கு 78ஆவது இடம்

- ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில், இந்தியா 78ஆவது இடத்தில் உள்ளது.
- சர்வதேச வெளிப்படைத்தன்மை நிர்வாக அமைப்பால் (Transparency International) 2018 ஆம் ஆண்டுக்கான ஊழல் நாடுகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 78ஆவது இடத்தில் உள்ளது.
- சீனா 87-வது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 117-வது இடம் பிடித்துள்ளது.
- ஊழல் மிக குறைந்த நாடுகள் பட்டியலில் டென்மார்க், நியூசிலாந்து நாடுகள் முதல் 2 இடங்களில் உள்ளன.
- சிரியா, சூடான் ஆகிய நாடுகள் கடைசி இடத்தில் உள்ளன.

## உத்தரபிரதேசத்தில் "உலகின் மிக நீளமான எக்ஸ்பிரஸ் சாலை"

- உத்தரபிரதேச மாநிலத்தில் 600 கி.மீ. தூரத்துக்கு உலகின் மிக நீளமான 'எக்ஸ்பிரஸ் சாலை' (World's longest expressway) அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்த சாலை ரூ.36 ஆயிரம் கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. இதற்கு "கங்கா எக்ஸ்பிரஸ் சாலை" (Ganga Expressway) என பெயரிடப்பட்டுள்ளது.

## ➢ இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் (NSSO 2017-2018) அதிகரிப்பு

- 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதாக, 'தேசிய சாம்பிள் சர்வே' அறிக்கை (National Sample Survey Office, NSSO) தெரிவித்துள்ளது.
- 2017-18-ம் ஆண்டுக்காக உருவாக்கப்பட்ட அறிக்கையை 'பிஸ்னஸ் ஸடாண்டர்டு' என்னும் பொருளாதார நாளேடு ஆய்வு செய்து 'தேசிய சாம்பிள் சர்வே' என்னும் தகவல் சேகரிப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நாட்டில் வேலையில்லா திண்டாட்டத்தின் அளவு கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2017-18-ம் ஆண்டில் 6.1 சதவீதம் அதிகரித்து விட்டது.
- இந்த வேலையின்மை அளவு என்பது கடந்த 1972-73-ம் ஆண்டு நாட்டில் நிலவியதற்கு ஒப்பாகும்.
- இளைஞர்களிடையே வேலையின்மை 13 முதல் 27 சதவீதம் உயர்ந்து தற்போது 6.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் வேலையின்மை அளவு 7.8 சதவீதமாகவும்,
- கிராமப்புறங்களில் வேலையின்மை அளவு 5.3 சதவீதமாகவும் இருந்துள்ளது.
- 2016-ம் ஆண்டு பிரதமர் மோடி கொண்டு வந்த பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பின் நாட்டின் வேலைவாய்ப்பு நிலைமை குறித்து எடுக்கப்பட்ட முதல் முழுமையான ஆய்வு அறிக்கை இதுவாகும்.

## ➢ உஜ்வாலா துப்புரவுத் துணிகள் முன்னெடுப்பு

- ❖ புவனேஸ்வரில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் உஜ்வாலா துப்புரவுத் துணிகள் என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.
- ❖ ஒடிசா மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக துப்புரவுத் துணிகள் வழங்கும் குஷி திட்டத்திற்கு நிகராக மத்திய அரசின் இந்த திட்டம் செயல்படும்.
- ❖ இந்த புதிய திட்டமானது பெண்கள் சுகாதார வசதிகளை அணுகுவகை அதிகப்படுத்தவும் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ IPC-ன் கீழ் மாற்றுப் பாலினத்தவர் பாலியல் வழக்குப் பதிவு செய்ய அனுமதி

- ❖ சமீபத்தில் தில்லி உயர்நீதி மன்றமானது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354A என்ற விதியின் (Indian Penal Code – IPC) கீழ் மாற்று பாலினத்தவர்களும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு வழக்குப் பதிவு செய்ய முடியும் என உத்தரவிட்டுள்ளது.
- ❖ பாலியல் துன்புறுத்தல் மற்றும் அதற்கான தண்டனைகளைப் பற்றி இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354A கூறுகிறது.

CHENNAI IAS ACADEMY

- ❖ இந்த உத்தரவானது ஒரு மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்த மாணவரின் பாலியல் துன்புறுத்தல் புகாரைப் பதிவு செய்வதற்கு பொருத்தமான தண்டனைப் பிரிவு இல்லையென காவல்துறையால் மறுக்கப்பட்டதின் விளைவாக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ➢ மல்லார்ட் இனத்தின் கடைசி வாத்து இறப்பு

- தென் பிசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள மிகச்சிறிய தீவு, நியுவே தீவு, இத்தீவில் உலகில் எங்கும் காணப்படாத 'மல்லார்ட்' இன வாத்துகள் (Ninu Duck) வாழ்ந்து வந்தன.
- தற்போது உலகில் எங்கும் காணப்படாத 'மல்லார்ட்' இனத்தின் கடைசி வாத்து இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ➢ இந்தியா நிர்வகிக்கவுள்ள "இலங்கை மாத்தளை விமான நிலையம்"

- இலங்கை மாத்தளையில் உள்ள ராஜபக்சே சர்வதேச விமான நிலையத்தின் 70 சதவீத பங்குகளை இந்தியாவுக்கு அளிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. விமான நிலையத்தை 40 ஆண்டுகள் இந்தியா நிர்வகிக்கும். இதுதொடர்பான ஒப்பந்தம், இரு நாடுகளின் விமான நிலைய ஆணையங்களிடையே கையெழுத்தாக உள்ளது.
- இலங்கையில் உள்ள ஹம்பன்தோட்டா துறைமுகத்தை சீனாவிடம் இலங்கை ஒப்படைத்துள்ளது.

## ➢ POCSO சட்டத்தில் திருத்தம்

- ❖ 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்த திருத்தங்களானது குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் குற்றங்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இந்த திருத்தங்களானது குழந்தைகள் மீதான மோசமான உடல் ரீதியாக ஊடுருவும் தன்மை கொண்ட பாலியல் வன்கொடுமை தாக்குதல்களுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் விதிப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கிறது.
- ❖ பிரிவு எண் 9-ன் திருத்தமானது பேரிடர் மற்றும் இயற்கைப் பேரழிவு காலங்களிலும் குழந்தைகளுக்குப் பாலியல் துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாப்பை அளிக்கிறது.

## ➢ CBI தலைவர் பதவிக்கு மீண்டும் அலோக் வர்மா

- ❖ இந்திய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயின் ஆணைப்படி உச்ச நீதிமன்ற அமர்வானது, எவ்வித முக்கியமான கொள்கை முடிவெடுக்கும் அதிகாரங்களும் வழங்காமல் CBI அமைப்பின் தலைவராக அலோக் குமார் வர்மாவை மீண்டும் பதவியில் அமர்த்தியுள்ளது.

CHENNAI IAS ACADEMY

- இது அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரை முழுமையாக அதிகாரத்திலிருந்து நீக்கி 2018 அக்டோபர் 23 ஆம் தேதி அன்று வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக வழங்கப்பட்டது.
- இவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளுக்கு மத்திய ஊழல் தடுப்பு ஆணையமானது (CVC – Central Vigilance Commission) வெற்றிகரமாக விசாரணையை நடத்திய பின்னர் CBI தலைவரை நியமனம் செய்யும் உயர் அதிகாரம் கொண்ட குழுவால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்த உயர் அதிகாரம் கொண்ட குழுவானது பிரதமர், இந்திய தலைமை நீதிபதி மற்றும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## நாடாளுமன்ற பட்ஜெட் தொடர் 2019

- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர், 2019 ஜனவரி 31-ந் தேதி தொடங்கி, பிப்ரவரி 13-ந் தேதி வரை நடைபெறுகிறது.
- இந்த (2019) ஆண்டு, நாடாளுமன்ற தேர்தல் நடக்கவிருப்பதால், இடைக்கால பட்ஜெட்தான் தாக்கல் செய்ய முடியும். தேர்தலுக்கு பிறகு அமையும் அரசுதான், முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யும்.
- 2019, பிப்ரவரி 1-ந் தேதி, இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருப்பதால், இடைக்காலமாக அப்பொறுப்பை கவனிக்கும் அமைச்சர் பியூஷ் கோயல், இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.

## 'வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்' ரெயில்

- தானியங்கி முறையில் என்ஜின் இன்றி செயல்படும் இந்தியாவின் முதலாவது ரெயில் சென்னையில் உள்ள ரெயில் பெட்டி தொழிற்சாலையில் (ICF) தயாரிக்கப்பட்டது. பதினெட்டே மாதங்களில் தயார் செய்யப்பட்டதால் இந்த அதிவேக ரெயிலுக்கு, 'ரெயில் 18' என பெயர் வந்தது.
- 'ரெயில் 18' அதிவேக ரெயிலுக்கு 'வந்தே பாரத்' என புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- 'வந்தே பாரத்' ரெயில் டெல்லி-வாரணாசி இடையே இயக்கப்பட உள்ளது.
- 16 பெட்டிகளை கொண்ட, 'ரெயில் 18', ரூ.100 கோடி செலவில், முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய 2018 ஆண்டு அக்டோபர் 29-ந் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.
- மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் இந்த ரெயிலின் வெற்றிகரமான சோதனை ஓட்டம் 2018 டிசம்பர் மாதம் ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்தது.

## வெப் வொண்டர் உமன் பிரச்சாரம்

CHENNAI IAS ACADEMY

- இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது #WWW:Web-Wonder Women எனும் ஆன்லைன் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- சமூக ஊடகங்கள் வழியாக சமூக மாற்றத்திற்காக நேர்மறையான செயல்பாட்டு திட்டத்தினைக் கொண்டுள்ள தனித்துவமான மகளிரை அங்கீகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- ப்ரேக்துரு (Breakthrough) மற்றும் ட்விட்டர் இந்தியா ஆகியவை இந்த பிரச்சாரத்தின் பங்குதாரர்கள் ஆவர்.

## இந்திய வனப்பணி பெயர் மாற்றம்

- பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறையானது இந்திய வனப்பணியை (IFOS) இந்திய வனம் மற்றும் பழங்குடியினர் பணி (IFTS – Indian Forest and Tribal Service) என பெயர் மாற்றம் செய்ய முன்மொழிந்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது இந்திய வனப்பணியானது பழங்குடியினர் மீதும் வனவாசிகள் மீதும் அதிக கவனத்தினைக் கொண்டிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இது பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் உத்தரவினைபடுத்து இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஜார்ஜ் பெர்னாண்டஸ் காலமானார்

- டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் ஜனவரி 29 அன்று, ஜார்ஜ் பெர்னாண்டஸ் (88) காலமானார். 1989-90 ஆண்டுவாக்கில் ரெயில்துறை அமைச்சராகவும்,1998-2004-ம் ஆண்டுவாக்கில் வாஜ்பாய் தலைமையிலான அரசில் ராணுவத்துறை அமைச்சராகவும் பதவி வகித்தார்.
- இவரது பதவிக்காலத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான கார்கில் போரும், போக்ரான் அணுகுண்டு பரிசோதனையும் நடைபெற்றது.
- கர்நாடக மாநிலம், மங்களுருவில் 3-6-1930 அன்று ஜார்ஜ் பெர்னாண்டஸ் பிறந்தார்.

## இந்தியாவின் முதல் " DRONE Air Tax"

- இந்தியாவில் முதன் முறையாக 'DRONE' மூலம் வானில் பறக்கும் 'ஏர் டாக்சி' யை (India's first Air taxi, Drone Air Taxi), அண்ணா பல்கலைக்கழகத்தை சேர்ந்த 'தக்ஷா' மாணவர் குழு (Anna University MIT's 12-Member Daksha Team) தயாரித்துள்ளது.
- **DRONE 'Air Taxi'**
- 80 கிலோ எடை கொண்ட மனிதர்களை தூக்கிச் செல்லும் திறனுடன் 20 கி.மீ. தூரம் பறந்து செல்லும் வகையில் இந்த 'ஏர் டாக்சி' வடிவமைக்கப்பட்டு

CHENNAI IAS ACADEMY

உள்ளது. இந்த 'ஏர் டாக்சி' சென்னையில் நடைபெற்ற 2 நாள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இடம்பெற்றிருந்தது.

- நடிகர் அஜித்குமாரை தொழில்நுட்ப வழிகாட்டியாக கொண்டது "தக்ஷா" மாணவர் குழு.
- இந்த "ஏர் ஆம்புலன்சில்" சென்னையில் இருந்து வேலூர் வரை பறக்க முடியும்.
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின்போது குறிப்பிட்ட நேரத்துக்குள் உடல் உறுப்பு பாகங்களை இந்த 'ஏர் ஆம்புலன்சு' மூலம் எளிதாக கொண்டு சென்று நோயாளிகளுக்கு பொருத்தி காப்பாற்ற முடியும்.

## ➢ ராஷ்ட்ரிய கோகுல் மிஷன்

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது குறிப்பிட்ட மற்றும் அறிவியல் முறையில் உள்நாட்டு மாட்டினங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது கீழ்க்காணும் 2 கூறுகளை உள்ளடக்கியது.
- எருது போன்ற விலங்குகளின் இனப்பெருக்கத்திற்கான தேசிய திட்டம் - (National Programme for Bovine Breeding-NPBB)
- எருது போன்ற விலங்குகளின் உற்பத்தி திறன் மீதான தேசிய திட்டம்- (National Mission on Bovine Productivity-NMBP)

## ➢ உன்னதி – யுனிஸ்பேஸ் மிகச்சிறிய செயற்கைக் கோள் சேர்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்

❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் - சிறிய செயற்கைக் கோள் உருவாக்கத்தின் மீதான திறன் உருவாக்கத் திட்டமான உன்னதி (Unispace Nanosatellite Assembly & Training programme) என்ற திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.

❖ இது வெளிப்புற விண்வெளியின் அமைதியான பயன்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி மீதான ஐக்கிய நாடுகளின் முதல் மாநாட்டின் மீதான (United Nations conference on the exploration and peaceful uses of outer space – UNISPACE 50) 50வது ஆண்டு விழாவை நினைவு கூர்ந்திட ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

❖ உன்னதி திட்டம் மூன்று ஆண்டு காலத்திற்கு பெங்களூரில் உள்ள யு.ஆர்.ராவ் செயற்கைக் கோள் மையத்தில் மேற்கொள்ளப்படும்.

❖ பொறுப்பு - விண்வெளித் துறை.

## ➢ பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு: பிப்ரவரி 1,2019 முதல் அமல்

- மத்திய அரசு வேலைகளில், பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் நடைமுறை பிப்ரவரி 1-ந்தேதி முதல் அமலுக்கு

CHENNAI IAS ACADEMY

வருகிறது. இது குறித்த உத்தரவை மத்திய சமூக நீதித்துறை மற்றும் அதிகார வழங்கல் துறை பிறப்பித்துள்ளது.

- மத்திய அரசு பணிகள் மற்றும் சேவைகளில் பிப்ரவரி 1-ந்தேதி அல்லது பின்வரும் அனைத்து நேரடி ஆள் சேர்ப்பிலும் வழங்கப்படவுள்ளது.
- 5 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட விவசாய நிலம், நகராட்சி பகுதிகளில் ஆயிரம் சதுர அடியோ, அதற்கு மேலோ பரப்பளவு கொண்ட வீடு,300 சதுர அடியோ அதற்கு மேலோ பரப்பளவு கொண்ட வீட்டு மனை, நகராட்சி தவிர்த்து பிற பகுதிகளில் 600 சதுர அடியோ அதற்கு மேலோ வீட்டுமனை உள்ளவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டைப் பெற முடியாது.

## ➢ புது டெல்லியில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அருங்காட்சியம்

- 2019 23 ஜனவரி, பிரதமர் நரேந்திர மோடி நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 122 வது பிறந்த நாள் விழாவை நினைவுகூரும் வகையில் புது டெல்லியில் செங்கோட்டையில் (Red Fort) "சுபாஷ் சந்திர போஸ் அருங்காட்சியக"த்தை (Subhash Chandra Bose museum) திறந்து வைத்தார்.

## ➢ அரசு மின்னணுச் சந்தை – உமனியா

- ❖ அரசு மின்னணுச் சந்தையானது பல்வேறு அரசு அமைச்சகங்களுக்கு நேரடியாக கைவினைப் பொருட்கள், கைத்தறி, சணல் மற்றும் தேங்காய் நார் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் அலுவலக வேலைப்பாடுகள் ஆகியவற்றை பெண் தொழில்முனைவோர்கள் மற்றும் பெண் சுய உதவிக் குழுக்கள் விற்பனை செய்வதை இயலச் செய்திடும் வகையில் அரசு மின்னணுச் சந்தை மீதான பெண்கள் எனப்படும் முன் முயற்சியை வெளியிட்டு இருக்கின்றது.
- ❖ அரசு மின்னணுச் சந்தை என்பது பல்வேறு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களால் பொருட்கள் மற்றும் தேவைகளை கொள்முதல் செய்வதற்கான அமைச்சகத்தின் ஒரு இணையதள நடைமுறையாகும்.

## ➢ திரிஷ்னா எரிவாயுத் திட்டம்

- ❖ தேசிய வனவுயிர் மன்றமானது ஒஎன்ஜிசி நிறுவனத்தின் திரிஷ்னா எரிவாயுத் திட்டத்திற்கான தனது அனுமதியை வழங்கி இருக்கின்றது.
- ❖ அரசுக்குச் சொந்தமான ஒஎன்ஜிசியின் திரிபுரா மாநிலப் பிரிவு கோமதி மாவட்டத்தில் பெலோனியா துணைப் பகுதியில் உள்ள திரிஷ்னா வனவிலங்கு சரணாலயத்திலிருந்து கூடிய விரைவில் இயற்கை எரிவாயுவைத் தோண்டி எடுக்கும் பணியை ஆரம்பிக்கும்.
- ❖ மாநில வனவுயிர் மன்றத்தின் பரிந்துரைகளையடுத்து, தேசிய வனவுயிர் மன்றமானது இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கி இருக்கின்றது.

CHENNAI IAS ACADEMY

## ➢ அரசமைப்புச் சட்டத்தின் 371(A) பிரிவு

- அரசமைப்புச் சட்டத்தின் 371(A) பிரிவு நாகாலாந்துக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்குகிறது. ஆதன்படி, நாகா இன மக்களின் மதம் மற்றும் சமூகம் சார்ந்த நடைமுறைகள், நாகா பாரம்பரிய சட்டம் மற்றும் செயல்முறை, நில உரிமை, நில மற்றும் மூலதனங்கள் பகிர்வு ஆகியவை தொடர்பாக நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்துக்கு, நாகாலாந்து சட்டப்பேரவை ஒப்புதல் அளிக்க வேண்டும். இல்லையேல், மத்திய அரசு இயற்றும் சட்டம் மாநிலத்துக்குப் பொருந்தாது.
- 2019 ஜனவரி 8-ஆம் தேதி, குடியுரிமை சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- அரசமைப்புச் சட்டத்தின் 371(A) பிரிவின்படி, நாகாலாந்துக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதால், அங்கு குடியுரிமை சட்டத் திருத்த மசோதா பொருந்தாது என மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நாகாலாந்து மாநில முதல்வர் நெபியூ ரியோ கடிதம் எழுதியுள்ளார்.

## ➢ ஜம்மு-காஷ்மீரில் சிறப்பு உரிமைகள் வழங்கும் 35(A) சட்டப்பிரிவு

- ஜம்மு-காஷ்மீரில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்கு சிறப்பு உரிமைகள் வழங்கும் 35 (A) சட்டப்பிரிவு ஆகும். 1954-ஆம் ஆண்டு அரசமைப்பில் சேர்க்கப்பட்ட 35 (A) சட்டப்பிரிவானது, ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தையும், அங்குள்ள மக்களுக்கு சிறப்பு உரிமைகளையும் வழங்குகிறது.

## ➢ 103-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்

- ❖ குடியரசுத் தலைவர் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகத்தினருக்கு 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கின்ற 124-வது அரசியலமைப்புத் திருத்த மசோதாவிற்கு (தற்சமயம் 103-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்) தனது ஒப்புதலினை அளித்திருக்கின்றார்.
- ❖ மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் மக்களவையில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதியன்று இட ஒதுக்கீட்டு மசோதாவை அறிமுகம் செய்தார். இம்மசோதா 323 ஆதரவு வாக்குகளும் வெறும் 3 எதிர்ப்பு வாக்குகளும் பெற்று நிறைவேற்றப்பட்டது.
- ❖ மாநிலங்களவையும் இம்மசோதாவை 2019 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதியன்று 165 ஆதரவு வாக்குகளோடும் 07 எதிர்ப்பு வாக்குகளோடும் நிறைவேற்றியது.

## ➢ பிரதான் மந்திரி ரோஜ்கார் புரோத்சகான் யோஜனா

- ❖ வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான மத்திய அரசின் தனித்துவ திட்டங்களில் ஒன்றான பிரதான் மந்திரி புரோத்சகான் யோஜனா 2019-ம் ஆண்டு ஜனவரி 14-ம்

CHENNAI IAS ACADEMY

தேதி அதன் பயனாளிகளின் எண்ணிக்கையில் ஒரு மிகப்பெரிய மைல்கல்லான ஒரு கோடி என்ற எண்ணிக்கையைக் கடந்திருக்கின்றது.

- இத்திட்டத்தின் நேரடியான பயன் என்பது யாதெனில் இத்திட்டத்தின் பயனாளிகளான தொழிலாளர்கள் சேமநல நிதி, ஓய்வூதியம் மற்றும் மரணத்தோடு தொடர்புடைய காப்பீடு ஆகியவற்றின் மூலம் பாதுகாப்பு நன்மைகளை அடைய முடியும்.

## டெல்லியில் பறவைகள் மருத்துவமனைகள்

- டெல்லி (Delhi) மாநில அரசு, பறவைகள் மருத்துவமனைகளை (Bird Hospitals) தொடங்க முடிவு செய்துள்ளது.

## தமிழ்நாடு ராணுவ தளவாட உற்பத்தி வழித்தடம்

- தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, சேலம், ஓசூர், கோவை உள்ளிட்ட 5 நகரங்களை இணைக்கும் ராணுவ தளவாட உற்பத்தி வழித்தட திட்டத்தை (Defence corridor, Tamil Nadu), மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஜனவரி 20 அன்று திருச்சியில் தொடங்கி வைத்தார். (Tamil Nadu Defence Industrial Corridor, Tamil Nadu Defence Production Quad).
- இராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் ரூ.3.038 கோடி முதலீடு செய்யப்படுகிறது.
- கோவையில் உள்ள கொடிசியாவில் செயல்படுத்தப்படவுள்ள, பாதுகாப்பு துறைக்கான புதிய கண்டு பிடிப்பு மற்றும் வளர்ச்சி மைய திட்டத்தையம் தொடங்கிவைத்தார்.

## 9-வது சர்வதேச சிறு பாசன மாநாடு

- மகாராஷ்டிராவின் ஔரங்காபாத் நகரில் மத்திய நீர்வள ஆதாரங்கள் மற்றும் நதி மேம்பாட்டு அமைச்சகமானது 9-வது சர்வதேச சிறு பாசன மாநாட்டை நடத்தியிருக்கின்றது.
- இம்மாநாடு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் கிடைக்கும் அனுபவங்களையும் சொட்டுநீர், தெளிப்பு மற்றும் இதர உள்ளூர் பாசன முறைகளில் உள்ள சிறந்த மேலாண்மை முறைகளையும் பகிர்ந்திட எண்ணுகின்றது.
- இந்த மாநாடு "சிறு பாசனம் மற்றும் நவீன விவசாயம்" என்ற கருத்துருவின் மீது கவனம் செலுத்தியது.

## இந்திய சினிமாவின் முதல் தேசிய அருங்காட்சியகம்

- மகாராஷ்டிராவின் மும்பையில் நாட்டின் முதலாவது இந்திய சினிமாவிற்கான தேசிய அருங்காட்சியகத்தை (National Museum of Indian Cinema – NMIC) பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த அருங்காட்சியகமானது நூற்றாண்டு கால பழமையான இந்திய திரைப்படங்களின் பயணத்தை விளக்கமாககாட்ட முற்படுகின்றது.

CHENNAI IAS ACADEMY

- ❖ இந்த NMIC ஆனது திரைப்பட இயக்குநர் ஷ்யாம் பெனகலின் தலைமையிலான அருங்காட்சியக ஆலோசனை குழுவின் வழி காட்டுதலின் கீழ் கட்டப்பட்டது.
- ❖ கவிஞர் பிரசூன் ஜோஷி தலைமையிலான புத்தாக்கக் குழுவும் NMIC-ஐ மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

## ➢ கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணார்-காவேரி நதி – இணைப்பு திட்டம்

- கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணார்-காவேரி நதிகளை இணைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது (Project report for linking rivers Godavari-Krishna-Pennar-Cauvery 2019). இந்த திட்டத்துக்கு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் கோடி வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டு உள்ளது.

## ➢ L&T நிறுவன பீரங்கி தொழிற்சாலை – குறிப்புகள்

- குஜராத் மாநிலத்தை சூரத் நகருக்கு உள்ள ஹஜிரா என்ற இடத்தில் உள்ள லார்சன் அண்டு டூப்ரோ (L&T) நிறுவனம், பீரங்கி உற்பத்தி பிரிவை (Armoured Systems Complex of Larsen and Toubro in Hazira, Gujarat) தொடங்கியுள்ளது.
- இந்த L&T நிறுவனத்தின் பீரங்கி (K9 Vajra-T)தொழிற்சாலையை பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 19 அன்று திறந்துவைத்தார்.
- 'கே9 வஜ்ரா' என்ற பீரங்கிகள் (K9 Vajra-T 155 mm/52-caliber tracked self-propelled Howitzer guns programme) இந்த நிறுவனத்தில் ஒப்பந்தப்படி ரூ.4,500 கோடியில் 100 பீரங்கிகள் தயாரிக்கப்படவுள்ளன.
- L&T நிறுவனம் 2017-ம் ஆண்டு ராணுவ அமைச்சகத்திடம் 'கே9 வஜ்ரா' என்ற ராணுவ பீரங்கிகள் தயாரித்து வழங்க ஒப்பந்தம் செய்துகொண்டது.

## ➢ ஆயுதங்கள் வழங்கும் முதல் தனியார் தொழிற்சாலை L&T

- இந்திய பாதுகாப்பு துறைக்கு ஆயுதங்கள் வழங்கும் முதல் தனியார் தொழிற்சாலை "L&T நிறுவனம்" ஆகும்.
- இந்த நிறுவனத்தில் கே9 வஜ்ரா பீரங்கிக்காக 400 சிறு, குறு தொழில் நிறுவனங்கள் சுமார் 13 ஆயிரம் உதிரிபாகங்களை தயாரிக்கின்றன. இதில் வெளிநாட்டு உதவியின்றி அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

## ➢ இராணுவ காவல் துறையில் மகளிர்க்கு 20% வேலை

- ❖ அலுவலர் பதவிக்கு கீழ்நிலையில் உள்ள பணியாளர் பதவிகளான (Personnel Below Officer Rank-PBOR) இராணுவ காவல் துறைப் பிரிவில் மகளிரை இணைப்பது குறித்த முடிவை மத்திய பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டுள்ளார்.
- ❖ ஒட்டுமொத்த இராணுவ காவல் துறையில் இறுதியில் 20% அளவிற்கு வரிசைப்படுத்தப்பட்ட விகிதத்தில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

CHENNAI IAS ACADEMY

- ❖ இதன்படி இராணுவம் வருடந்தோறும் 52 பணியாளர்கள் என்ற அளவில் இராணுவ காவல்துறையில் சுமார் 500 பெண்களை சேர்த்துக் கொள்ளும்.
- ❖ இராணுவ காவல் துறை என்பது இராணுவ சூழல் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக ஒழுங்குமுறைகளை அமலாக்கம் செய்வது மற்றும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது ஆகியவற்றிற்கு பொறுப்புடையதாகும்.

## அந்தமானில் புதிய கடற்படை விமானத் தளம் - INS KOHASSA

- ❖ அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள டிஜிலிபூரில் INS KOHASSA என்ற புதிய கடற்படை விமானத் தளத்தை கடற்படை தலைமை அட்மிரலான சுனில் லம்பா துவக்கி வைத்தார்.
- ❖ இந்த விமானத் தளம் பாதுகாப்புத் துறைக்கும் பயணிகள் விமானப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும். மேலும் இது ஒரு தனிப்பட்ட பிரிவாக செயல்படும்.
- ❖ அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள 3-வது விமான தளமாக, INS KOHASSA மலாக்கா சந்தி வழியாக இந்தியப் பெருங்கடலில் நுழையும் சீனக் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணித்திடுவதற்குப் பயன்படுத்தப்படும்.

## குரு கோவிந்த் சிங்கின் "352 வது பிறந்த நாள்" Prakash Utsav

- 10 வது சீக்கிய குரு "குரு கோவிந்த் சிங்" (10th Sikh guru Govind Singh) அவர்களின், 352 வது பிறந்த நாள் ஜனவரி 13 அன்று பல பகுதிகளிலிருந்தும் பிரகாஷ் உட்சவ் (Prakash Utsav) என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. குரு கோவிந்த் சிங் 1666-ஆம் ஆண்டு பிறந்தார்.

## ஒரு குடும்பம், ஒரு வேலை திட்டம்

- சிக்கிம் முதலமைச்சர் பவன் சாம்லிங், அண்மையில் "ஒரு குடும்பம் ஒரு வேலை திட்ட"த்தை (One Family, One Job scheme) சிக்கிம் மாநிலத்தில் (Sikkim) துவக்கிவைத்தார்.

## இந்திய-சீன எல்லையில் "44 சாலைகள்" திட்டம்

- இந்தியா-சீனா இடையிலான எல்லை கோடு, சுமார் 4 ஆயிரம் கி.மீ. நீளம் கொண்டது.இந்த எல்லை கோடு "McMahon line" என்று அழைக்கப்படுகிறது.
- காஷ்மீர், இமாசலபிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், அருணாசலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியாக "McMahon line" செல்கிறது.
- இந்த எல்லையில், ரூ.21 ஆயிரத்து 40 கோடி செலவில், போர் முக்கியத்துவம் வாய்ந்த 44 சாலைகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➢ பிரவசி தீர்த்த தர்ஷன் யோஜனா

- ❖ பிரதமர் சமீபத்தில் புதுதில்லியில் பிரவசி தீர்த்த தர்சன் யோஜனா என்ற திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கின்றார்.
- ❖ இதன் கீழ் ஒரு வருடத்திற்கு இருமுறை இந்தியாவில் உள்ள சமயம் சார்ந்த பகுதிகளுக்கு அரசு நிதியளிக்கும் சுற்றுலாவாக இந்திய வம்சாவளியினரின் ஒரு பிரிவினர் அழைத்துக் கொள்ளப்படுவர்.
- ❖ இதன் தகுதிக்கான விதிகளின் கீழ், 45 முதல் 65 வயதிற்கு இடைப்பட்ட அனைத்து இந்திய வம்சாவளி மக்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இதிலிருந்து ஒரு குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ முதன்முறையான முன்னுரிமை விருப்பம், கிரீமித்தியா நாடுகள் என்றழைக்கப்படும் மொரீசியஸ், பிஜி, சுரினாம், கயானா, டிரினிடாட் மற்றும் டொபாகோ மற்றும் ஜமைக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்படும்.

## ➢ இம்பெக்ஸ் 2018-19

- ❖ இந்தியா மியான்மர் நாடுகளுக்கிடையேயான இருதரப்பு இராணுவப் பயிற்சியான இம்பெக்ஸ் 2018-19 என்பதின் இரண்டாவது பதிப்பானது ஹரியானாவில் உள்ள சாந்தி மந்திர் இராணுவ நிலையத்தில் நடைபெற்றது.
- ❖ இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கமானது ஐ.நா.வின் கீழ் அமைதிப்படை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்காக மியான்மர் இராணுவத்தினரை பயிற்றுவிப்பதாகும்.
- ❖ இந்திய ராணுவமானது ஐ.நா. அமைப்பின் நடவடிக்கைகளில் பணியாற்றுவதில் அதிக அனுபவங்களைக் கொண்டது. மேலும் உலகளவிலான அமைப்பின் அதிக அளவில் வீரர்களை அளிக்கும் நாடாகவும் இந்தியா உள்ளது.

## ➢ 2019 மார்ச் 1 முதல் புதுச்சேரியில் "பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை"

- 2019 ஆம் ஆண்டு மார்ச் 1 முதல், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களின் மீது புதுச்சேரி அரசு தடை விதிக்க முடிவு (Puducherry Ban Single-Use Plastic) செய்துள்ளது.
- தமிழ்நாட்டில் 2019 ஜனவரி 1-ந் தேதி முதல் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தமிழ்நாடு அரசு தடை விதித்தது.

## ➢ தேர்தலில் "டிஜிட்டல் ஊடக பிரச்சாரம்" குறித்த "உமேஷ் சின்ஹா" அறிக்கை

- தேர்தலுக்கு முன்பான 48 மணி நேரத்தில், டிஜிட்டல் ஊடக பிரச்சாரம் (Digital media and campaigning during last 48 hours before polls) குறித்த அறிக்கையை "உமேஷ் சின்ஹா" (Umesh Sinha Committee) தலைமையிலான குழு தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது.



CHENNAI IAS ACADEMY

## ➢ கடல் கண்காணிப்புப் பயிற்சி (SEA VIGIL)

- ❖ 26/11 தாக்குதல் நடந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியக் கடற்படையானது அதன் மிகப்பெரிய கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான இந்தியக் கடலோரப் பகுதிகளுக்கான கடல் கண்காணிப்பு பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்தியக் கடற்படையானது முன்னதாக மாநிலங்கள் அளவில் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சிகளை ஆண்டுக்கு இருமுறை மேற்கொண்டது.
- ❖ ஆனால் முதன்முறையாக அனைத்துக் கடலோர மாநலங்கள், தீவு பிரதேசங்கள் மற்றும் அனைத்து மத்திய மற்றும் மாநில அமைப்புகளும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
- ❖ இது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியக் கடற்படையால் நடத்தப்படும் முக்கிய போர்க்கள நிலையிலான முப்படைப் பயிற்சியான ட்ரோபெக்ஸ் (TROPEX) அளவிற்கு உருவாக்கப்படுகிறது.
- ❖ 26/11 அன்று மும்பையில் நடைபெற்ற தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயல்திறனை முழுமையான அளவில் மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும்.

## ➢ இந்தியா ஆப்பிரிக்கா களப்பயிற்சி

- ❖ இந்தியா ஆப்பிரிக்கா களப்பயிற்சியானது (Indian Africa Field Training Exercise-IAFTX) 2019 மார்ச் 18 முதல் 27 வரை புனேவில் நடைபெறவுள்ளது.
- ❖ இந்த IAFXT கூட்டுப் பயிற்சியானது இந்தியா மற்றும் 12 ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே நடத்தப்படவுள்ளது.
- ❖ இந்த கூட்டுப்பயிற்சியானது மனிதாபிமான சுரங்க நடவடிக்கைகள் மற்றும் கூட்டு சமாதான நடவடிக்கைகளில் இராணுவங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மேலும் இந்த பயிற்சியானது ஐ.நா.-வின் அமைதிப்படை நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடனும் நடத்தப்படுகின்றது.

## ➢ லடாக்கில் அமையும் "உலகின் மிகப் பெரிய சோலார் திட்டம்"

- ஜம்மு-காஷ்மீர் எல்லை பகுதியான லடாக்கில் உலகின் மிகப் பெரிய சோலார் திட்டத்தை (Leh-Ladakh solar power generation programme) அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- கார்கிலுக்கு கிழக்கே 200 கி.மீ., தூரம் வரை, லடாக்கில் 5000 மெகாவாட் மின்திறன் கொண்ட சோலார் திட்டத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- சுமார் ரூ.45000 கோடி முதலீட்டில் அமைக்கப்பட உள்ள இந்த திட்டம் 2023-ம் ஆண்டில் நிறைவடைய உள்ளது.

CHENNAI IAS ACADEMY

- தற்போது சீனாவில் உள்ள டெங்கர் பாலைவன சோலார் பூங்காவே உலகின் மிகப் பெரிய சோலார் மின்உற்பத்தி திட்டமாக கருதப்படுகிறது. இதில் 1547 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

## ➢ பொதுப்பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு மசோதா: குடியரசுத்தலைவர் ஒப்புதல்

- பொதுப்பிரிவில் பொருளாதார ரீதியாக பின்தங்கியிருக்கும் ஏழைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் 10% இடஒதுக்கீடு (10% Economically Weaker Sections Quota) வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 124-ஆவது திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை 7.1.2019 அன்று ஒப்புதல் அளித்தது.
- 124-ஆவது திருத்த சட்ட முன்வடிவுக்கு நாடாளுமன்ற மக்களவையில் 8.1.2019 அன்று ஒப்புதல் பெறப்பட்டது. இந்த மசோதா மாநிலங்களவையில் 9.1.2019 அன்று நிறைவேறியது.
- இந்த மசோதாவை சட்டமாக்க குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் 12.1.2019 அன்று ஒப்புதல் அளித்துள்ளார்.
- முத்தலாக் முறையில் முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்து வழங்குவதற்கு "எதிராக அவசர சட்டம், இந்திய மருத்துவ கவுன்சில் அவசர சட்டம், கம்பெனிகள் அவசர சட்டம்" ஆகியவை அண்மையில் பிறப்பிக்கப்பட்டன. இந்த 3 அவசர சட்டங்களுக்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் 12.1.2019 அன்று ஒப்புதல் அளித்தார்.

## ➢ கிருஷி கிரிஷாக் பந்து திட்டத்தின் கீழ் 2 முன்முயற்சிகள்

- ❖ மேற்கு வங்காள அரசானது கிருஷி கிரிஷாக் பந்து திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு 2 நலத் திட்டங்களை அறிவித்துள்ளது.
- ❖ 18 முதல் 60 வயது வரையிலான விவசாயிகள் இயற்கையாகவோ அல்லது இயற்கையல்லாத வகையிலோ மரணித்தால் அவர்களின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாயை அரசு வழங்கும்.
- ❖ ஒரு ஏக்கர் நிலத்தில் ஒற்றைப் பயிரை வளர்ப்பதற்கு ஆண்டிற்கு 2 முறை விவசாயிகளுக்கு ரூ.2500 கிடைக்கும்.

## ➢ மகாராஷ்டிரா 100% மின்சார வழங்கல் இலக்கு

- மகாராஷ்டிர மாநில அரசானது 2018 டிசம்பர் 27 அன்று அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கி 100% மின்சாரம் வழங்கல் எனும் இலக்கை அடைந்துள்ளது.
- அம்மாநில அரசானது 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கப்பட்ட மத்திய அரசின் சௌபாக்யா என்ற திட்டத்தின் கீழ் 100% மின்சாரம் வழங்குவதற்கான காலக்கெடுவாக 2018 டிசம்பர் 31ஐ நிர்ணயித்திருந்தது.

CHENNAIIASACADEMY

## "சார்தாம்" இணைப்பு சாலை திட்டம்

- உத்தரகாண்ட் மாநிலத்தில் "சார்தாம்" (Char Dam Project) என அழைக்கப்படும் யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய 4 புனித தலங்களுக்கு அனைத்து காலநிலையிலும் சென்று வரக்கூடிய வகையில் இந்த இணைப்பு சாலை அமைக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

## ரேணுகாஜி பல்நோக்கு அணை திட்டம் - குறிப்புகள்

- 2019 ஜனவரி 11 அன்று, ரேணுகாஜி பல்நோக்கு அணை (Renukaji multipurpose dam project) திட்டத்திற்கான ஒப்பந்தம் டெல்லி உள்ளிட்ட 6 மாநிலங்கள் இடையே கையெழுத்திடபட்டுள்ளது.
- உத்திரப்பிரதேசம், அரியானா, இமாச்சல பிரதேசம், டெல்லி, ராஜஸ்தான் மற்றும் உத்தரகண்ட் ஆகிய 6 மாநிலங்கள் ஆகும்.
- இந்த ஒப்பந்தத்தின் படி, உத்தரகண்ட மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் மலைப்பகுதிகளில் யமுனை ஆறு மற்றும் அதன் இரண்டு துணையாறுகளான (Yamuna and two of its tributaries, Tons and Girl) டான்ஸ் மற்றும் கிரி பகுதிகளில், மூன்று நீர் சேமிப்புத் திட்டங்கள் கட்டப்படவுள்ளன.

## தெலுங்கானா மருத்துவமனையின் கின்னஸ் உலக சாதனை

- தெலுங்கானாவின் MNJ புற்றுநோயியல் மற்றும் பிராந்திய புற்றுநோய் நிறுவனமானது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த அரசால் நடத்தப்படும் முதல் மருத்துவமனை ஆகியுள்ளது.
- இந்த கின்னஸ் அங்கீகாரமானது ஆண்டுகளுக்கு சுரப்பிகளின் மீதான புற்றுநோய் குறித்து மிகப்பெரிய அளவில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியதற்காக அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது ஒரே நாளில் 487 ஆண்டுகளால் கலந்து கொள்ளப்பட்டது.

## காவல் துறையின் மீதான ரக்சா செயலி

- ஆந்திரப் பிரதேச முதல்வர் சமீபத்தில் குப்பம் நகரில் சித்தூர் போலீசாரால் வடிவமைக்கப்பட்ட பிராண ரக்சா இணையதள செயலியை வெளியிட்டிருக்கின்றார்.
- இந்த செயலியானது சிக்கல்களில் உள்ள பெண்களைத் தொடர்பு கொள்ளவும் சாலை விபத்துகளில் சிக்கிக் கொண்ட நபர்களின் உயிரைக் காப்பாற்றவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➢ இந்திய விண்வெளி ஆய்வு மையத் திட்டங்கள் - தகவல் குறிப்புகள்

- இந்திய விண்வெளி ஆய்வு மைய திட்டங்கள் குறித்து, இந்திய விண்வெளி ஆய்வு மையத் (ISRO 2019 Missions) தலைவர் கே.சிவன் தெரிவித்துள்ள குறிப்புகள் விவரம்:
- இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO), 2018-ஆம் ஆண்டில்,18 திட்டங்கைளச் செயல்படுத்தியுள்ளது. 7 ராக்கெட், 9 விண்கலங்கள், ஒரு வெள்ளோட்டத் திட்டம் அடங்கும்.
- ISRO-வின் கட்டுப்பாட்டில் தற்போது, 47 விண்கலங்கள் செயல்பட்டு வருகின்றன.
- உன்னதி என்ற புதிய திட்டத்தை 17.1.2019 அன்று தொடங்கயுள்ளது. (ISRO UNNATI programme 2019, UNispace Nanosatellite Assembly & Training).
- UNNATI திட்டத்தில் 45 நாடுகள் பங்கேற்கவிருக்கின்றன.
- நாடு முழுவதும் 6 விண்வெளி சிக்கல் தீர்வு மையங்களைத் திறக்கவுள்ளோம். முதல் மையம் திரிபுராவில் அகர்தலாவில் தொடங்கப்பட்டுள்ளது.
- 2019 ஏப்ரல் மாதத்தில் சந்திரயான்-2 (Chandrayaan-2 விண்கலத்தை நிலவுக்கு அனுப்பப்படவுள்ளது)
- **ககன்யான்:** மனிதனை விண்ணுக்கு அனுப்பும் விண்மனிதன் (Gaganyaan Mission 2019) திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. ககன்யான் திட்டத்தை 2021-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.
- பெங்களூரில் மனித விண்ணூர்தி மையம் (New Space Centre, Bengaluru for Gaganyaan mission) தொடங்கப்படும். இதன் மைய இயக்குநராக டாக்டர் உண்ணிகிருஷ்ணன் செயல்படுவார். விண் மனிதன் திட்ட இயக்குநராக ஹட்டியன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ➢ ஜனநாயகக் குறியீடு பட்டியல் 2018:இந்தியா 41-வது இடம்

- பொருளியல் புலனாய்வு அமைப்பின் 2018 ஜனநாயகக் குறியீட்டு பட்டியலில், இந்தியா 41-வது இடம் பெற்றுள்ளது.
- நார்வே, ஐஸ்லாந்து, சுவீடன், நியூசிலாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் முறையே முதல் 5 இடங்களை பிடித்துள்ளது.

## ➢ அடல் சோலார் க்ருஷி பம்ப் திட்டம்

- ❖ மின்சாரக் கட்டணம் செலுத்தாமையால் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும் சூரிய சக்தியை ஊக்குவிக்கவும் மகாராஷ்டிரா அரசானது அடல் சோலார் க்ருஷி பம்ப் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த திட்டத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று
- ❖ அரசானது விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய ஒளியால் இயங்கும் தண்ணீர் இறைப்பானை வழங்குவதாகும்.

CHENNAI IAS ACADEMY

- மேலும் அரசானது இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு இரண்டு LED விளக்குகள், DC காற்றாடி மற்றும் கைபேசி சார்ஜர் ஆகியவற்றை இலவசமாக வழங்கவும் முடிவு செய்துள்ளது.

## ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா

- மத்தியப் பிரதேச முதல்வர் கமல்நாத் தனது அரசின் "ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா" என்ற பெயர் கொண்ட 50000 கோடி ரூபாய் அளவிற்கான விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார்.
- மாநில அமைச்சரவையானது 55 லட்சம் விவசாயிகளின் பயிர்க்கடனை தள்ளுபடி செய்வதற்கு தனது ஒப்புதலையும் கடன் தள்ளுபடிக்கான அதிகபட்ச வரம்பு தேதியை 2018-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியிலிருந்து 2018-ம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதி வரைக்கும் நீட்டிப்பதற்கான தனது ஒப்புதலையும் அளித்துள்ளது.

## GST கவுன்சிலின் 32-வது கூட்டம்: ஜனவரி 10, 2019-குறிப்புகள்

- GST கவுன்சிலின் 32-வது கூட்டம் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் டெல்லியில் (GST Council Meeting January 10,2019) நடந்தது.
- ஆண்டுக்கு ரூ.20 லட்சம் வரை விற்று முதல் கொண்ட சிறு வணிகத்தை பாதுகாப்பதற்காக அவற்றின் ஜி.எஸ்.டிக்கான விலக்கு (Exemption limit for GST) வரம்பை ரூ.40 லட்சமாக உயர்த்துவது என இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இது வருகிற நிதியாண்டு 2019 ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வருகிறது.
- வடகிழக்கு மாநிலங்களில் ரூ.10 லட்சமாக இருந்த இந்த விலக்கு வரம்பு, இனிமேல் ரூ.20 லட்சமாக உயர்த்தப்படுகிறது.
- மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவில் மாநிலங்களுக்கு இடையேயான விற்பனைக்கு 2 ஆண்டுகள் வரை 1 சதவீத பேரிடர் வரி வசூலிக்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

## உலக வங்கியின் இந்தியா மொத்த உள்நாட்டு (GDP) உற்பத்தி கணிப்பு-7.3%

- உலக வங்கியின், 2019 உலகளாவிய பொருளாதார முன்னேற்ற (World Bank's 2019 Global Economic Prospects report) அறிக்கையின் படி, 2019 நிதியாண்டுக்கான (FY19), இந்தியாவின் மொத்த உள்நாட்டு (GDP) உற்பத்தியின் (Darkening Skies) கணிப்பு 7.3%-மாக உள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➤ மது பாபு ஓய்வூதியத் திட்டம்

- ❖ மது பாபு ஓய்வூதியத் திட்டத்தின் (Madhu Babu Pension Yojana-MBPY) கீழ் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தில் மாதத்திற்கு 200 ரூபாய் உயர்வை ஒடிசாவின் முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.
- ❖ அம்மாநில அரசானது வயதானோருக்கான ஓய்வூதியம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை இணைத்து ஒரே திட்டமாக 2008 ஜனவரி 01 அன்று மது பாபு ஓய்வூதியத் திட்டத்தினை தொடங்கியது.
- ❖ ஆதரவற்ற வயயோதிகர்களுக்கும் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும் நிதியுதவி அளிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## ➤ யுவ சுவாபிமான் யோஜனா

- ❖ மத்தியப் பிரதேசத்தின் நகர்ப்புறங்களில் இருக்கும் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்காக "யுவ சுவாபிமான் யோஜனா" என்ற திட்டத்தை அம்மாநில முதல்வர் தொடங்கி வைத்தார்.
- ❖ இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் இருக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது.
- ❖ மேலும் இவர்களுக்கு திறன் பயிற்சியும் அளிக்கப்படவிருக்கிறது.

## ➤ "Gangajal Project" என்ற திட்டம் - தொடக்கம்

- 2019 ஜனவரி மாதம் 9 அன்று, பிரதமர் நரேந்திர மோடி "Gangajal Project" என்ற திட்டத்தை ஆக்ரா நகரில் தொடங்கி வைத்தார். 2900 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த "Gangajal Project" திட்டம் ஆக்ரா நகருக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் ஆகும்.

## ➤ டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேம்படுத்த "நந்தன் நிலேகனி" குழு

- இந்திய ரிசர்வ் வங்கி டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கூறுவதற்கு "நந்தன் நிலேகனி" தலைமையிலான 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

## ➤ ஜீபன் சம்பர்க் திட்டம்

- ❖ ஒடிசாவின் முதல்வர் வருடந்தோறும் நடைபெறும் ஆதிவாசி மேளாவின் 2019 ஆம் ஆண்டு விழாவில் ஒடிசாவின் "குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்களின்" (Particularly Vulnerable Tribal Groups-PVTG) நலனுக்காக ஜீபன் சம்பர்க் என்ற திட்டத்தை அறிவித்துள்ளார்.

CHENNAI IAS ACADEMY

- யுனிசெப்பின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் இந்த திட்டமானது ஒடிசாவில் உள்ள "குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினரிடையே" விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திறன் மேம்பாடு, சமூகத்தினருக்கு அதிகாரமளித்தல், குழுக்களுக்கிடையே புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- ஒடிசா மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான PVTG மக்கள் காணப்படுகின்றனர்.
- 1975 ஆம் ஆண்டு தேபர் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் PVTG எனும் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது.
- ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவரான பி.வி.ஆர். மோகன் தலைமையிலான குழுவானது 2020 ஆம் ஆண்டிலிருந்து புதிய கல்லூரிகளை அமைக்க அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (AICTE – All India Council for Technical Education) அனுமதிக்கக் கூடாது என்று பரிந்துரைத்துள்ளது.
- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது பொதுச் சேவை மையங்கள் மூலமாக புகார்களைப் பதிவு செய்வதற்காக 14433 எனும் இலவச தொலைபேசி எண்ணைத் தொடங்கியுள்ளது. இந்த இலவச எண்ணானது ஆணையத்தின் அலுவல் நேரங்களில் மட்டுமே உபயோகப்படுத்த முடியும்.
- சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரான மலாலா யூசப்சாய் தான் உலகம் முழுவதும் மேற்கொண்ட பயணத்தையும் அகதிகள் முகாமிற்குச் சென்றதையும் தொகுத்து ஒரு புதிய புத்தகமாக "We are displaced: My Journey and Stories from Refugee Girls Around the World" என்ற பெயரில் எழுதியுள்ளார்.
- அரசாங்க அமைப்புகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளை நேர்மையான முறையில் நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து பரிந்துரைப்பதற்காக
- நந்தன் நீல்கேனி (இன்போசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர்)
- விஜய் பி பட்கர் (புகழ்பெற்ற கணிப்பொறி ஆராய்ச்சியாளர்)

ஆகியோர்களை உள்ளடக்கிய 3 பேர் கொண்ட குழுவை அமைக்க இந்திய உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

## மூன்று வட்டார கிராமப்புற வங்கிகள் (RRBS) ஒன்றிணைப்பு

- 2019 ஜனவரி 1 முதல், மத்திய அரசு, பஞ்சாப் கிராமின் வங்கி (Punjab Gramin Bank), மால்வா கிராமின் வங்கி (Malwa Gramin Bank) மற்றும் சட்லஜ் கிராமின் வங்கி (Sutlej Gramin Bank) ஆகிய மூன்று பிராந்திய வட்டார வங்கிகளை (Regional Rural Banks, RRBs) ஒன்றிணைத்துள்ளது.

## குடியுரிமை சட்டத் திருத்த மசோதா: மக்களவையில் நிறைவேற்றம்

- அண்டை நாடுகளில் இருந்து வந்த சிறுபான்மையினருக்கு இந்திய குடியுரிமை அளிக்க வகை செய்யும் குடியுரிமை சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் (8.1.2019) நிறைவேற்றப்பட்டது.
- அண்டை நாடுகளில் இருந்து இந்தியாவில் குடியேறியுள்ள இந்துக்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு, இந்த மசோதாவின் மூலம் இந்திய குடியுரிமை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## DNA மசோதா: மக்களவையில் நிறைவேற்றம்

- விபத்து உள்ளிட்டவற்றில் பாதிக்கப்பட்டோர், குற்றவாளிகள், காணாமல் போன நபர்கள் உள்ளிட்டோரை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு, டெக்ஸிபோனாகிளிக் அமிலம் (DNA) மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- குற்றங்களுக்கு தீர்வு காணவும், காணாமல் போனோரை கண்டுபிடிக்கவும், அமெரிக்கா, பிரிட்டன், நார்வே உள்ளிட்ட 60 நாடுகளில் டிஎன்ஏ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

## ரெயில் நிலையங்களில் பயணிகளை அனுமதிப்பதில் புதிய திட்டம்

- விமான நிலையங்களைப் போல் ரெயில் நிலையங்களிலும் பயணிகளை அனுமதிப்பதில் "உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பாதுகாப்பு சோதனை திட்ட முறை"யை அமல்படுத்த ரெயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.
- கர்நாடக மாநிலம் உப்பள்ளி, உத்திரபிரதேசம், பிரயாக் ராஜ் (அலகாபாத்) ஆகிய ரெயில் நிலையங்களில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது.
- இந்த திட்டத்தின்படி பயணிகள் செல்லும் ரெயில்கள் புறப்படுவதற்கு 15 முதல் 20 நிமிடங்களுக்கு முன்பாக அந்த பகுதியில் உள்ள நுழைவு வாயில் மூடப்படுகிறது.

## விவாகரத்து சட்டத்திருத்த மசோதா 2019

- விவாகரத்து சட்டத் திருத்த மசோதா (Personal LawsAmendment Bill 2019, LokSabha) நாடாளுமன்ற மக்களவையில் (7.1.2019) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி விவாகரத்து கோரும் சட்ட விதியில் இருந்து தொழுநோய் பாதிப்பை நீக்கி சட்டதிருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு "10% இட ஒதுக்கீடு"

- முற்பட்ட வகுப்பினர்களில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு உயர்கல்வி, அரசு வேலைவாய்ப்பில் கூடுதலாக 10% இட ஒதுக்கீடு செய்ய மத்திய



CHENNAI IAS ACADEMY

அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (Cabinet approves 10% reservation economically backward).

## ➢ மிகப்பெரிய சொத்து மேலாண்மை நிறுவனம் "HDFC Mutual Fund"

- இந்தியாவின் மிகப்பெரிய சொத்து மேலாண்மை நிறுவனமாக (AMC-Asset Management Company) HDFC Mutual Fund நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## ➢ அண்டார்க்டிகாவின் உயர்ந்த சிகரத்தில் ஏறிய "உலகின் முதல் பெண் மாற்றுத்திறனாளி" Dr.Arunima Sinha

- 2019 ஜனவரி 4 அன்று, அண்டார்க்டிகாவின் மிக உயர்ந்த சிகரமான மவுண்ட் வின்சன் (Antarctica's Highest Peak – Mount Vinson), சிகரத்தை ஏறிய உலகின் முதல் பெண் மாற்றுத்திறனாளி (world's first female Amputee) என்ற சிறப்பை இந்திய மருத்துவர் அருணீமா சின்ஹா (Dr. Arunima Sinha) பெற்றுள்ளார்.

## ➢ கேரளாவில் அமையும் "பாரம்பரிய மொழி மையம்"

- கேரள மாநிலத்தின் திரூர் நகரில் உள்ள (Thunchath Ezhuthachan Malayalam University) துஞ்சத்து எழுத்தச்சன் மலையாள பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய மொழி மையம் (Centre for Classical Language) நிறுவ மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

## ➢ பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு – குறிப்புகள்

- பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 10% இடஒதுக்கீடு (10% reservation for economically backward upper caste) வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கல்வி, வேலைவாய்ப்புகளில், நாடு முழுவதும் சாதி அடிப்படையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித் மற்றும் பழங்குடியினருக்கு என சுமார் 50% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- தற்போது, பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கும் இடஒதுக்கீடு வழங்க, அரசியல் சாசனத்தின் 15 மற்றும் 16-வது பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.
- இந்த அரசியல் சாசன திருத்த மசோதா, பொருளாதாரத்தில் 10% இடஒதுக்கீடு பெற வழிவகை செய்கிறது.
- **தகுதி:** ஆண்டுக்கு ரூ.8 லட்சத்துக்கு குறைவான வருமானம் மற்றும் 5 ஏக்கர் வரை நிலம் கொண்டிருக்கும் பொதுப்பிரிவினர் இந்த இடஒதுக்கீடு பெற தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➢ தேஜஸ்' அதிவேக ரயில் சோதனை

- அதிவேகம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய "தேஜஸ்' ரயில் சோதனை ஓட்டம் ஜனவரி 5 அன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- "தேஜஸ்' ரயில் சென்னை சென்ட்ரலில் இருந்து எழும்பூர் வழியாக விழுப்புரம் வரை 110 கி.மீ. வேகத்தில் இயக்கப்பட்டது.
- தேஜஸ் ரயிலை சென்னை ICF தொழிற்சாலை தயாரித்துள்ளது.
- "தேஜஸ்' ரயில் சென்னை-மதுரை (Second Tejas train to run between Chennai-madurai Tejas Rail) இடையே பகல் நேர ரயிலாக விரைவில் இயக்கப்பட உள்ளது.
- முதலாவது தேஜஸ் ரயில் மும்பை-கோவா இடையே கடந்த ஆண்டு இயக்கப்பட்டது.

## ➢ கோயல் கரோ மண்டல் அணை திட்டம், ஜார்க்கண்ட்

- ஜார்க்கண்ட் மாநிலம், டால்டன்கஞ்ச் பகுதியில், கோயல் கரோ மண்டல் அணை திட்டம் (Koel-karod Dam Project) உள்பட பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 5 அன்று தொடங்கி வைத்தார்.
- ஜார்க்கண்ட் மற்றும் பிகார் மாநிலங்களில், சுமார் 19,604 ஹெக்டேர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பயனடையும்.

## ➢ மன்மோகன் சிங் திரைப்படம் "The Accidental Prime Minister"

- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பற்றிய "The Accidental Prime Minister" திரைப்படம் தயாரிக்கபட்டுள்ளது.
- இந்தத் திரைப்படத்தில் பிரபல இந்தி நடிகர் அனுபம் கெர், மன்மோகன் சிங் வேடத்தில் நடித்துள்ளார்.

## ➢ பாகிஸ்தான் 'பஞ்ச தீர்த்தம்' தேசிய சின்னமாக அறிப்பு

- பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் உள்ள பழங்கால இந்து மத தலமான 'பஞ்ச தீர்த்தம்' தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ➢ ISRO-வின் மாணவர்களுக்கான புதுமுயற்சி "SAMWAD"

- **இந்திய விண்வெளி ஆய்வு (ISRO)** மையம் **"மாணவர்களுக்கான விண்வெளி அறிவியல் (Space Science Activities) கண்டிபிடிப்பு"** களுக்காக **"SAMWAD"** என்ற புதுமுயற்சியை **(Initiative)** தொடங்கியுள்ளது.

CHENNAI IAS ACADEMY

## ➢ மேகாலயத்தில் சட்ட விரோத சுரங்கங்கள்: ரூ.100 கோடி அபராதம்

- மேகாலயத்தில் **சட்டவிரோத நிலக்கரிச்சுரங்கங்களை** தடுக்கத் தவறியதாக, **மேகாலய அரசுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம்** ரூ.100 **கோடி, அபராதம்** விதித்துள்ளது.
- மேகாலயத்தில் இதுதொடர்பாக ஆய்வு செய்வதற்கு **ஓய்வுபெற்ற நீதிபதி பி.பி. ககோடி** தலைமையிலான குழு 2018 **ஆகஸ்ட் மாதம்** அமைக்கப்பட்டது.
- மேகாலயத்தில் சட்டவிரோத சுரங்கம் ஒன்றில், 20 **நாள்களுக்கும் மேலாக** 15 **தொழிலாளர்கள்** சிக்கியுள்ளனர்.

## ➢ எட்டாம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி முறை ரத்து மசோதா: நிறைவேற்றம்

- நாடு முழுவதும் பள்ளிகளில் **எட்டாம் வகுப்புவரை கட்டாய தேர்ச்சி** அளிக்கும் முறையை ரத்து செய்வதற்கான மசோதாவுக்கு **நாடாளுமன்றம் ஒப்புதல்** அளித்துள்ளது.
- 2009-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட **'குழந்தைகள் இலவச, கட்டாய கல்வி உரிமை சட்டம் (Right of Children to Free Compulsory Education Act,2009),** எட்டாம் வகுப்புவரை எந்த மாணவரையும் 'FAIL' ஆக்குவதற்கு தடை விதிக்கிறது.
- இச்சட்டப்படி, எட்டாம் வகுப்புவரை அனைத்து மாணவர்களும் கட்டாய தேர்ச்சி (ALL PASS) செய்யப்பட்டு வருகிறார்கள்.

## ➢ இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய பொதுத்துறைவங்கி – Baroda (BoB) வங்கி

- சமீபத்தில், Baroda (BoB) வங்கியுடன் Vijaya Bank and Dena Bank வங்கிகள் இணைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த Baroda (BoB) வங்கி, **இந்தியாவின் மிகப் பெரிய பொதுத்துறைவங்கிகளில் மூன்றாவதாக** இடம்பிடித்துள்ளது.

## ➢ உலகின் மிக சக்திவாய்ந்த இடைமறி ஏவுகணை – S-400

- உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த இடைமறி ஏவுகணையான, ரஷ்யா நாட்டின் S-400 ஏவுகணை கருதப்படுகிறது.
- S-400 அதிநவீன ஏவுகணையை இந்தியாவுக்கு 2019-ஆம் ஆண்டு முதல் ரஷியா அளிக்கவுள்ளது.
- S-400 தொடர்பாக இந்தியா, ரஷ்யா இடையே 2018 அக்டோபர் மாதம் ரூ.40,000 கோடி மதிப்பில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

CHENNAI IAS ACADEMY

## ➢ 2019 புத்தாண்டில் இந்தியாவில் 69 ஆயிரம் குழந்தைகள் - ஐ.நா. அவை தகவல்

- **இந்தியாவில் 2019 புத்தாண்டு** தினத்தில் பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை **69 ஆயிரத்து** 944. இது உலக அளவில் 18 **சதவீதம்** ஆகும். **உலக அளவில் இந்தியா முதல் இடத்தில்** உள்ளது.
- 44,940 குழந்தைப் பிறப்புகளுடன் **சீனா 2-ஆவது இடத்திலும், 25,685 குழந்தைப் பிறப்புகளுடன் நைஜீரியா 3-ஆவது** இடத்திலும், 15,112 குழந்தைப் பிறப்புகளுடன் **பாகிஸ்தான் 4-ஆவது இடத்திலும், 13,256 குழந்தைப் பிறப்புகளுடன் இந்தோனேஷியா 5-ஆவது** இடத்திலும் உள்ளதாக **ஐ.நா. தகவலளித்துள்ளது.**
- தற்போதைய நிலையில், **இந்தியர்களின்** சராசரி **வயது** 27-ஆக கணக்கிடப்பட்டுள்ளது. **சீனாவின் சராசரி வயது** 38 ஆகும்.
- உலகளவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் **சீனா முதலிடத்திலும், இந்தியா 2-ஆவது இடத்திலும்** உள்ளன.
- 2024-**ஆம் ஆண்டில்** சீனாவை பின்னுக்குத்தள்ளி மக்கள் தொகையில் **இந்தியா முதலிடம் பிடிக்கும்** என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ➢ அலகாபாத் நகரின் பெயர் (பிரயாக்ராஜ்) மாற்றம்: மத்திய அரசு ஒப்புதல்

- உத்தரபிரதேச மாநிலம் **அலகாபாத்** நகரை **"பிரயாக்ராஜ்"** என பெயர் மாற்றம் செய்ததற்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- உலகப் புகழ் பெற்ற **கும்பமேளா உத்தரபிரதேச மாநிலம் அலகாபாத்தில் ஜனவரி** 15-ஆம் தேதி தொடங்க உள்ளது.

## ➢ கேரளாவில் 620 கி.மீ.க்கு பெண்கள் பங்கேற்ற "வனிதா மதில்"

- கேரளாவில் வடக்கு பகுதியான **காசர்கோடு தொடங்கி தெற்கு பகுதியான திருவனந்தபுரம்** வரை, மொத்தம் **620 கி.மீ.க்கு பெண்கள்** கைகளை இணைத்து, **"வனிதா மதில்"** என்று பெயரிடப்பட்ட **'பெண்கள் சுவர்' பெண்கள் மட்டுமே பங்கேற்ற** நிகழ்ச்சி **ஜனவரி** 1 அன்று நடந்தது.
- **உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி சபரிமலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும்** என்று வலியுறுத்தி, **விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக** இந்த நிகழ்வு நடைபெற்றது.

## ➢ "INS விராட்" போர்க்கப்பல்: அருங்காட்சியமாக கொள்கை அளவில் ஒப்புதல்

- இந்திய கடற்படையில் இருந்து விடுவிக்கப்பட்ட **"ஐஎன்எஸ் விராட்"** போர்க்கப்பலை **அருங்காட்சியகமாகவோ அல்லது உணவகமாகவோ மாற்ற**

வேண்டும் என்ற கோரிக்கைக்கு கொள்கை **அளவில் ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ளது.

- **இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் "INS விராட்"**
- இந்தியாவின் **முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் என்ற பெருமையை** பெற்ற **ஐஎன்எஸ் விராட், 27,800 டன்** எடைக் கொண்டது.
- இங்கிலாந்து கடற்படையில் 1959-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை அந்த கப்பல் பணியாற்றியது.
- 1987-ஆம் ஆண்டு **இந்திய கடற்படையில் ஐஎன்எஸ் விராட் கப்பல்** இணைக்கப்பட்டது.
- 30 ஆண்டுகளாக பணியாற்றிய அந்த கப்பல், **2017-ஆம் ஆண்டு இந்திய கடற்படையில் இருந்து விடுவிக்கப்பட்டது.**
- **INS விராட் கப்பலை அருங்காட்சியகம் அல்லது உணவகமாக** மாற்றுமாறு **மகாராஷ்டிர அரசு** கோரிக்கை விடுத்து வருகிறது.

## ➢ அந்தமான் தீவுகளுக்கு வெளிநாட்டினர் நேரடியாக செல்ல அனுமதி

- **அந்தமான் நிகோபார் தீவு**களுக்கு **வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நேரடியாக வந்து செல்ல அனுமதி**யளிக்கப்பட்டுள்ளது.
- அந்தமான் நிகோபார் தீவுகளில் தனியாக குடியேற்ற சோதனை சாவடி இல்லாமல் இருந்த நிலையில், **"கடவுச்சீட்டு விதிகள்-1950ன் 3ஆவது பிரிவின்கீழ், போர்ட் பிளேர் விமான நிலையம்,** இந்தியாவுக்கு வெளிநாட்டினர் வந்து செல்ல **அங்கீகரிக்கப்பட்ட குடியேற்ற சோதனை சாவடியாக செயல்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**

CHENNAI IAS ACADEMY

# உலக நிகழ்வுகள்

## ➢ கட்டிடக்கலையின் "உலகத் தலைநகர் ரியோ டி ஜெனிரோ"

- பிரேசில் நாட்டின் "ரியோ டி ஜெனீரோ" நகரை "கட்டிடக்கலையின் உலகத்தலைநகராக" யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.
- ரியோ டி ஜெனீரோ நகரில் உள்ள மரக்கானா மைதானம் (Maracana Stadium) முன்பு அமைந்திருக்கும் ஏசு கிறிஸ்துவின் பிரம்மாண்ட சிலை (statue of Jesus Christ) அந்நகரின் சிறப்பான கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## ➢ பாகிஸ்தான் நாட்டின் தேசிய பானம் "கரும்பு சாறு"

- இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் சமீபத்தில் கரும்புச் சாற்றை (Sugarcane juice) 'தேசிய பானம்' (national drink) என்று அறிவித்துள்ளது.

## ➢ சீனாவின் மக்கள்தொகை – 139 கோடி

- நேபாளத்தில் ரூ.100-க்கு அதிகமான இந்திய கரன்சிக்குத் தடை
- நேபாளத்தில் சுற்றுலாப் பயணிகளும், வர்த்தகர்களும், வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களும் ரூ.100-க்கும் அதிகமான மதிப்புள்ள இந்திய கரன்சி நோட்டுகளை வைத்திருக்கவும், அவற்றைப் பயன்படுத்தவும் நேபாள ராஷ்டிர வங்கி தடை விதித்துள்ளது.
- ரூ.100 அல்லது அதற்கும் குறைவான மதிப்புள்ள இந்திய கரன்சிகளை பொதுமக்களும், வர்த்தகர்களும் பயன்படுத்தலாம்.

## ➢ பதிவியை துறந்த முதல் மலேசிய அரசர்

- ❖ மலேசிய வரலாற்றிலேயே முதன் முறையாக தனது 5 வருட பதவிக் காலம் முடிவடையும் முன்னரே மலேசியாவின் அரசரான ஐந்தாம் சல்தான் முகமது தனது 15-வது யாங் டி-பெர்டுவான் அகோங் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளார்.
- ❖ மலேசியாவின் சுழற்சி முறையிலான முடியாட்சி அமைப்பின் கீழ், ஒரு அரசர் 9 மலேசிய அரசக் குடும்பங்களிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவரார்.
- ❖ அடுத்த அரசரின் தேர்வானது, அனைத்து 9 அரசக் குடும்பத்தினரையும் இணைத்து உருவாக்கப்பட்ட அரசர்கள் குழுவினால் வாக்கெடுப்பு முறையில் தேர்வு செய்யப்படும்.

CHENNAI IAS ACADEMY

## பாஸ்போர்ட் குறியீடு பட்டியல் 2019: இந்தியா 79-வது இடம்

- 2019 ஹென்லே மற்றும் பார்ட்னர்ஸ் பாஸ்போர்ட் குறியீடு பட்டியலில் (Henley and Partners Passport Index 2019\Henley Passport Index 2019) இந்தியா 79-வது இடம் பெற்றுள்ளது.
- இந்திய பாஸ்போர்ட் (Indian passport) உலகிலேயே 79-வது மிக சக்தி வாய்ந்ததாக உள்ளது.
- முதல் 3 இடங்களை பெற்றுள்ள நாடுகள் விவரம்:
- ஜப்பான்
- சிங்கப்பூர், தென் கொரியா
- பிரான்ஸ், ஜெர்மனி

## நிலவின் இருண்ட பகுதியை படமெடுத்த" சீன ஆய்வுக் கலம்

- பூமியிலிருந்து பார்த்தால் தெரியாத நிலவினுடைய (Far Side of the Moon) பின் பகுதியின் 360 டிகிரி கோண படத்தை, சீனாவின் சாங் இ-4 (Chang'e 4) விண்கலம் முதல் முறையாக பூமிக்கு அனுப்பியுள்ளது.

## TBCC ஹைபர்சோனிக் Engine:சீன சோதனை

- ஒலியைப் போல 6 மடங்கு வேகத்தில் விமானங்களைப் பறக்கச் செய்யும் என்ஜின் ஒன்றை சீனா உருவாக்கி, வெற்றிகரமாக சோதித்துள்ளது. (TBCC engine, China's home-grown turbine-based combined cycle (TBCC) engine system)
- டர்போ அடிப்படையிலான இந்த என்ஜின், சீனா உருவாக்கி வரும் ஆளில்லா அதிவேக விமானங்களில் பொருத்தப்படுகிறது.

## இந்தியா-நார்வே இடையே கடல்சார் வர்த்தக பேச்சுவார்த்தை

- நார்வே பிரதமர் எர்னா சோல்பெர்க் 3 நாள்கள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ளார்.
- இந்தியா-நார்வே நாடுகளுக்கிடையே கடல்சார் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தையைத் தொடங்குவது குறித்தான ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ஐக்கிய நாடுகள் அவையால் வழங்கப்பட்டுள்ள 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் ஒத்துழைப்பு அளிப்பது குறித்து இருவரும் விவாதம் நடைபெற்றது.

## உலக வங்கியின் தலைவர் ராஜினாமா

- 2022-ல் முடிவடையும் பதவிக் காலத்திற்கு மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே வரும் பிப்ரவரி 1 ஆம் தேதி உலக வங்கியின் தலைவரான ஜிம் யோங் கிம் பதவி விலகுகிறார்.

- இவர் 2012 ஆம் ஆண்டில் உலக வங்கியின் தலைவராக முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவால் நியமிக்கப்பட்டார்.
- இரண்டாவது 5 ஆண்டு காலத்திற்கு வங்கியின் வாரியத்தினால் 2017 ஆம் ஆண்டில் மீண்டும் நியமிக்கப்பட்டார்.
- கிம்மின் தலைமையிலான உலக வங்கியானது 2030க்குள் தீவிர வறுமையை அகற்றுவதை இலக்காக அமைந்திருந்தது.
- உலக வங்கியின் தலைமை செயல் அதிகாரியான கிறிஸ்டாலினா ஜார்ஜிவா கிம்மின் பதவி விலகுவதைத் தொடர்ந்து பிப்ரவரி 1ஆம் தேதிக்குப் பின்னர் இடைக்காலத் தலைவராக பணியாற்றுவார்.

## இணைய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான "GAFA Tax"

- **உலகளாவிய இணைய தொழில்நுட்ப நிறுவனங்கள்** மீது **"GAFA Tax"** வரியை ஐரோப்பிய நாடான **பிரான்ஸ் (France)** அறிமுகப்படுத்தியுள்ளது.
- **GAFA** என்பதன் விரிவாக்கம்: **Google, Apple, Facebook and Amazon**

## சுல்தான் அப்துல்லா – புதிய மலேசிய அரசர்

- மலேசியா அதன் 16-வது அரசராக சுல்தான் அப்துல்லா இப்னி சுல்தான் அகமது ஷாவை அறிவித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி மலேசியாவின் அரசராக இருந்த கெலன்தான் மாகாணத்தின் ஐந்தாவது சுல்தான் முகமது பதவி விலகியதையடுத்து ஜனவரி 31ஆம் தேதி சுல்தான் அப்துல்லா மலேசியாவின் புதிய அரசர் அல்லது யாங் டி-பெர்டுவான் அகோங் ஆக அதிகாரப் பூர்வமாக பதவியேற்கவிருக்கிறார்.
- மலேசியாவின் பஹாங் மாகாணத்தின் சுல்தானாக 59 வயது நிரம்பிய அப்துல்லா உருவெடுத்துள்ளார். இவருக்கு முன் சுல்தான் அகமது ஷா சுல்தானாக இருந்தார்.

## UNESCO அமைப்பை விட்டு வெளியேறும் அமெரிக்கா, இஸ்ரேல்

- அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் UNESCO அமைப்பை விட்டு அதிகாரபூர்வமாக வெளியேற (United States and Israel officially quits Unesco) முடிவெடுத்துள்ளது.

## Fehmarn Belt Fixed Link சுரங்கப்பாதை திறப்பு

- டென்மார்க் மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளை இணைக்கும் Fehmarn Belt Fixed Link சுரங்கப்பாதை சமீபத்தில் திறக்கப்பட்டுள்ளது.

## உலகத் தமிழ் மாநாடு

- 10வது உலகத் தமிழ் மாநாடு 2019-ம் ஆண் ஜூலை 4-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை நான்கு நாட்களுக்கு சிகாகோவில் நடைபெறும்.

CHENNAI IAS ACADEMY

- இம்மாநாடு
- தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச அமைப்பு,
- வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு,
- சிகாகோ தமிழ்ச் சங்கம் ஆகியவற்றால் நடத்தப்பட இருக்கின்றது.
- அமெரிக்க மண்ணில் ஒரு உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட இருப்பது இதுவே முதல் முறையாகும்.
- சிகாகோ சர்வதேசக் கருத்தரங்கானது "கீழடி நம் தாய் மடி" (நமது தமிழ்த் தாயின் மடி-கீழடி அகழாய்வு) என்ற மையக் கருத்துருவுடன் தமிழ் ஆய்வுகளுக்கான கருத்தரங்கின் மீது முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது.
- மேலும் இம்மாநாடு தமிழ் அறிஞர் போதகர் ஜி.யு.போப் என்பவரது 200வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்காக அர்ப்பணிக்கப்படுகின்றது.

# அறிவியல் & தொழில்நுட்பம்

## 2019 ஆம் ஆண்டிலிருந்து உடல் ஸ்கேன் கருவிகள்

- அடுத்த ஆண்டிலிருந்து நாடெங்கிலும் உள்ள விமான நிலையங்களில் உடல் ஸ்கேன் கருவிகள் அமைக்கப்படவிருக்கின்றன.
- நாடெங்கிலும் விமான நிலையங்களில் உள்ள முழு உடல் ஸ்கேன் கருவிகள் "மில்லிமீட்டர் அலை" (Millimetre Wave) இயந்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இது சந்தேகத்திற்கிடமான பொருள் இருக்கும் இடத்தை அசைவூட்டப் படத்தின் மூலம் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக பயணியின் மீது மின்காந்த அலைகளை செலுத்துகின்றது.

## தாய்ஜினோமிக்ஸ் (தாய் மரபியல்)

- மைக்ரோசாப்ட் அசூரின் க்ளவுட் கம்ப்யூட்டிங் (மேகக் கணினி) மற்றும் சேமிப்பு வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி "தாய்ஜினோமிக்ஸை" மைக்ரோசாப்ட் மற்றும் தாய்வானின் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் இணைந்து கண்டுபிடித்துள்ளன.
- இது ஒரு செயற்கை நுண்ணறிவு (Al-Artificial Intelligence) சார்ந்த மரபணு பகுப்பாய்வுத் தளமாகும்.
- இந்த தளமானது நோயாளிகள் மற்றும் மருத்துவமனைகளால் வழங்கப்படும் மருத்துவம் மற்றும் மரபணு தரவுகளின் பரந்த அளவிலான அளவீடுகளைச் செயல்படுத்த, ஆய்வு செய்ய மற்றும் பகுப்பாய்வு செய்வதற்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறது.

CHENNAI IAS ACADEMY

- ❖ தாய்ஜீனோமிக்ஸானது நோய்களை மருத்துவர்கள் திறம்பட கண்டறிய உதவுவதன் மூலம் மனிதத் தவறுகளைக் குறைக்க உதவுகின்றது.

## ➢ சாங்' இ-4 விண்கலம்

- ❖ சாங்' இ-4 விண்கலமானது முதன்முறையாக நிலவின் மறுபுறத்தில் மெதுவாகத் தரையிறங்க ஆயுத்தமாவதற்காக ஒரு திட்டமிடப்பட்ட சுற்றுவட்டப் பாதையில் நுழைந்திருக்கின்றது.
- ❖ இந்த விண்கலமானது முதன்முறையாக நிலவின் மறுபகுதியான இருண்ட பகுதியல் தரையிறங்குவதற்கான நிலைக்கு நகர்ந்துள்ளது.
- ❖ சீன நாடானது டிசம்பர் மாதம் 08 ஆம் தேதியன்று லாங் மார்ச் - 3பி என்ற செலுத்து வாகனத்தின் மூலம் சாங்' இ-4 என்ற விண்கலத்தை விண்ணில் செலுத்தியது.
- ❖ நிலவின் மறுபுறத்தில் இந்த விண்கலத்தின் மெதுவான தரையிறக்கமானது மிகவும் சவாலானது. ஏனெனில் விண்வெளி ஓடம் மற்றும் பூமி ஆகியவற்றிற்கு இடையேயான ஏதேனும் நேரடித் தொடர்பானது நிலவின் மற்ற அரைக் கோளத்தினால் தடுக்கப்பட்டு விடும்.
- ❖ இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக சீன நாடானது, "கியூகியோ" அல்லது "மேக்பை பாலம்" என்ற ரிலே செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.

## ➢ நியூ ஹாரிசான் விண்கலம்

- ❖ நாசாவின் நியூ ஹாரிசான் விண்கலமானது பூமியிலிருந்து 4 பில்லியன் மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள மர்மமான கோளான அல்டிமா துலேவை ஆய்வு செய்யும் முதலாவது விண்கலமாக உருவெடுத்துள்ளது.
- ❖ இது மிகவும் பழமையான மற்றும் மனித குலத்தால் இதுவரை ஆய்வு செய்யப்படாமல் இருந்த அண்டப் பகுதி மற்றும் வெகு தொலைவில் உள்ள இலக்கு ஆகியவற்றை ஆய்வு செய்து வரலாற்றுச் சாதனை படைத்த ஒரு விண்வெளித் திட்டமாகும்.

## ➢ அல்டிமா துலே

- ❖ அல்டிமா துலேவானது நெப்டியுனின் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் சூரியக் குடும்பத்தின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள குய்ப்பர் பட்டையில் (Kuiper belt) அமைந்துள்ளது.
- ❖ இது சுமார் 30 கிலோ மீட்டர் விட்டத்தையும் ஒரு ஒழுங்கற்ற வடிவத்தையும் கொண்டுள்ளது.
- ❖ அல்டிமா துலேவானது பல பில்லியன் ஆண்டுகளாக சூரிய ஒளியிலிருந்து வெளிப்படும் ஹைட்ரோ கார்பனின் வெளிப்பாட்டின் காரணமாக சிவப்பு நிறத்தில் உள்ளது.

CHENNAI IAS ACADEMY

- அல்டிமா துலேவானது "கூல் கிளாசிகல்ஸ்" என்று அழைக்கப்படும் "குய்ப்பர் பட்டை" வகைப் பொருட்களின் ஒரு வகையைச் சார்ந்தது ஆகும். இந்த "கூல் கிளாசிகல்ஸானது" சூரிய சுழற்சிக்கான குறைவான சாய்வுகளுடன் ஒரு வட்டமான சுற்றுவட்டப் பாதையைக் கொண்டுள்ளது.

## பாலின் புத்துணர்வைக் கண்டறிய காகித உணர்வி

- ஐஐடி கௌகாத்தியின் அறிவியலாளர்கள் பாலின் புத்துணர்வைக் கண்டறியவும் எந்த அளவிற்கு அது பதப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டறியவும் உதவும் ஒரு எளிமையான காகிதத் தொகுப்பை உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு திறன்பேசி செயலியின் உதவியோடு செயல்படும். இது பால் புளிப்பாக மாறும் முன்னரே உபயோகப்படுத்தப்பட்டதை உறுதி செய்ய உதவுகின்றது.
- இந்த தொகுப்பைப் பயன்படுத்திப் பதப்படுத்தப்பட்ட பாலிலிருந்து பதப்படுத்தப்படாத பாலைக் கண்டறிய 15 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.
- அல்கலைன் பாஸ்பேட்டாஸ் (Alkaline Phosphatase-ACP) எனும் பாலில் உள்ள ஒரு நொதி பாலின் தரத்தைக் குறிக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.
- அறிவியலாளர்கள் ACP-யுடன் எளிதாக எதிர்வினையாற்றி நிறமாற்றமடையக் கூடியவாறு வேதியல் ஆய்வு மூலம் செறிவூட்டப்பட்ட ஒரு சாதாரணமான வடிகட்டி தாளை இந்த கண்டுபிடிப்பானை உருவாக்க பயன்படுத்தியுள்ளனர்.

## அப்பலோ 8-ன் 50-வது ஆண்டு விழா

- சந்திரனுக்கான நாசாவின் முதலாவது விண்கலமான அப்பல்லோ 8 ஆனது 2018 டிசம்பர் 21 அன்று தனது 50ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.
- 1968 டிசம்பர் 21 அன்று தொடங்கப்பட்ட இது அமெரிக்காவின் அப்பலோ விண்வெளித் திட்டத்தின் 2வது மனித விண்வெளிப் பயணத்திட்டமாகும்.

## புதிய கோள் - HD 21749b

- நாசாவின் "வெளிக் கோள்களைச் சுற்றி ஆய்வு செய்யும் செயற்கைக் கோளான" (TESS-Transiting Exoplanet Survey Satellite) HD21749 எனும் நட்சத்திரத்தைச் சுற்றி வரும் HD21749b எனும் பெயரிடப்பட்ட புதிய கோளைக் கண்டறிந்துள்ளது.
- இந்த கோளானது பூமியிலிருந்து 53 ஒளியாண்டு தொலைவில் உள்ள மங்கலான ரெடிகுலம் எனும் நட்சத்திரக் கூட்டத்தில் அமைந்துள்ளது.
- HD21749b ஆனது நமது சூரியனைப் போல் ஒளி வீசும் சூடான நட்சத்திரமான அதன் மைய நட்சத்திரத்தினை 36 புவி நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருகின்றது.
- இது பூமியை விட மூன்று மடங்கு பெரியதும் 23 மடங்கு அதிக நிறையையும் உடையதாகும். அதாவது திண்மமாக அல்லாமல் வாயுக் கோளாக இருக்கும் இது ஒரு துணை நெப்டியூன் கோளாகும்.

CHENNAI IAS ACADEMY

## விண்வெளி எரிபொருள் - ஐஐடி ஆராய்ச்சியாளர்கள்

- மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நீர் மூலக்கூறுகளின் உதவியுடன் கார்பன் டை ஆக்ஸைடுகளை படிக வடிவத்தில் அமைத்து விண்வெளி எரிபொருளை உருவாக்கியுள்ளனர்.
- இது எதிர்காலத்தில் பசுமை இல்ல வாயுக்களை கட்டுப்படுத்த உதவும்.

## டைட்டன் மீதான மீத்தேன் மழைப் பொழிவிற்கான ஆதாரம்

- விஞ்ஞானிகள் காசினி விண்கலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களைப் பயன்படுத்தி சனிக் கிரகத்தின் மிகப்பெரிய நிலவான டைட்டனின் வடக்கு துருவ முனையில் மீத்தேன் மழைப் பொழிவிற்கான ஆதாரங்களைக் கண்டறிந்திருக்கின்றனர்.
- இந்த மழைப்பொழிவானது டைட்டன் கிரகத்தின் வடக்கு துருவத்தில் கோடைக் காலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் முதல் ஆதாரமாக இருக்கும்.
- அந்நிலவின் வடக்கு துருவத்தின் மீதான கோடைக்கால மழைப்பொழிவின் முதல் கண்டுபிடிப்புகளைப் பிரதிபலிக்கும் நிலப்பரப்பு அடையாளம் காட்டுகின்றது.
- பூமியின் வருடாந்திர சுழற்சியான நான்கு பருவங்களோடு ஒப்பிடும்போது டைட்டனில் ஒரு பருவம் 7 புவி ஆண்டுகளுக்கு நீடிக்கின்றது.
- காசினி திட்டம் என்பது நாசா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் இத்தாலிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும். இது 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் செலுத்தப்பட்டது.
- இந்த விண்கலத்தின் நோக்கம் சனிக் கிரகத்தைப் பற்றியும் அதன் அமைப்பு, அதன் வளையங்கள் மற்றும் அதன் இயற்கையான துணைக் கோள்கள் பற்றியும் ஆய்வு செய்வதாகும்.

## இளம் அறிவியலாளர்கள் திட்டம்

- இஸ்ரோவானது இளம் மனங்களில் விண்வெளி ஆய்வுக்கான ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதற்கும் கற்பிப்பதற்கும் இளம் அறிவியலாளர்கள் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இத்திட்டத்தின் பண்புகளாவன:
- இது ஒரு மாத கால திட்டமாகும்.
- பெரும்பாலும் 8 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு விரிவுரை மற்றும் ஆய்வகங்களில் அனுமதி ஆகியவை அளிக்கப்படும்.
- 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களிலிருந்து தலா 3 மாணவர்கள் இந்த இளம் விஞ்ஞானித் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- இந்த மாணவர்கள் சிறிய ரக செயற்கைகோள்களை உருவாக்கும் நடைமுறை அனுபவத்தினைப் பெறுவர்.

CHENNAI IAS ACADEMY

## ➢ கலாம்சாட்-V2-எடைகுறைந்த செயற்கைக்கோள்

- ❖ இஸ்ரோ ஆனது ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து நான்கு நிலைகளைக் கொண்ட துருவ செயற்கைக்கோள் ஏவுவாகனத்தின் (Polar Satellite Launch Vehicle – PSLV) மூலம் கலாம்சாட்-V2 என்ற செயற்கைக் கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- ❖ இச்செயற்கைக் கோளானது முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் இந்திய விஞ்ஞானியான டாக்டர் அப்துல் கலாமின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இது இதுவரை வடிவமைக்கப்பட்டிராத மற்றும் புவிவட்டப்பாதைக்கு அனுப்பப்படாததுமான குறைந்த எடை கொண்ட செயற்கைக் கோளாகும். மேலும் இது தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு செலுத்தப்பட்ட இஸ்ரோவின் முதலாவது செயற்கைக் கோளாகும்.

## ➢ ரோஷிணி செயலி

- ❖ பார்வையற்றோருக்கு ரூபாய் நோட்டுகளை அடையாளம் காண்பதற்கு உதவும் ரோஷிணி எனும் செயலியை IIT-ரோபர் ஆனது உருவாக்கியுள்ளது.
- ❖ இந்த செயலியானது பழைய மற்றும் புதிய ரூபாய் நோட்டுகளை அடையாளம் கண்டு உங்கள் கையில் வைத்திருப்பது எந்த ரூபாய் நோட்டுக்கள் என்பது பற்றிய தகவல்களை ஒலி வடிவில் வழங்கும்.
- ❖ இந்திய ரூபாய் நோட்டுக்களை அடையாளம் காணும் முதல் ஆண்ட்ராய்டு செயலி ரோஷிணி ஆகும்.
- ❖ நாக்பூரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழுவானது பயன்பாடற்ற உலர் மின்கலங்களிலிருந்து உயர் மதிப்புடைய கிராபீன் என்பதைத் தயாரிக்க உதவும் ஒரு புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.

# நியமனங்கள்

## ➢ UPSC உறுப்பினராக "ராஜீவ் நயன் சௌபே" நியமனம்

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் (UPSC) உறுப்பினராக "ராஜீவ் நயன் சௌபே" (Rajiv Nayan Choubey) நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்), இந்திய காவல் பணி (ஐபிஎஸ்), இந்திய வெளியுறவு பணி (ஐஎ.ஃப்எஸ்) உள்பட பல்வேறு பதவிகளுக்கு யுபிஎஸ்சி அமைப்பு தேர்வுகளை நடத்தி வருகிறது.
- UPSC தலைவராக "அரவிந்த் சக்சேனா" உள்ளார்.

CHENNAI IAS ACADEMY

## ➢ ஸ்வீடன் பிரதமராக "ஸ்டெ.ஃபான் லா.ஃப்வென்" தேர்வு

- ஸ்வீடன் நாட்டின் புதிய பிரதமராக இடதுசாரி சோஷலிச ஜனநாயகக் கட்சியின் தலைவர் "ஸ்டெ.ஃபான் லா.ஃப்வென்" (Stefan lofven) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ➢ தைவான் பிரதமராக சூ தசெங்-சாங் நியமனம்

- தைவான் பிரதமராக சூ தசெங்-சாங் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஜனநாயக முற்போக்கு கட்சியின் முன்னாள் தலைவருமான சூ தசெங்-சாங்கை புதிய பிரதமராக அதிபர் தசாய் இங்-வென் நேற்று நியமித்துள்ளார்.
- வெனிசூலா அதிபராக "நிக்கோலஸ் மடூரோ" பொறுப்பேற்பு
- வெனிசூலா அதிபராக நிக்கோலஸ் மடூரோ (11.1.2019) இரண்டாடவது முறையாக பொறுப்பேற்றுள்ளார்.

## ➢ UPSC உறுப்பினராக டி.சி.ஏ. அனந்த் நியமனம்

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் (UPSC Member) உறுப்பினராக முன்னாள் தலைமை புள்ளியியலாளர் டி.சி.ஏ. அனந்த் (T.C.A. ANANT) நியமிக்கப்பட்டுள்ளார். UPSC-யில் தலைவர் உள்பட 10 உறுப்பினர்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ➢ CBI இடைக்கால இயக்குநராக நாகேஸ்வர ராவ் பதவியேற்பு

- டெல்லியில் **CBI** இடைக்கால இயக்குநராக நாகேஸ்வர ராவ் (Nageswara Rao) மீண்டும் (11.1.2019) பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.
- **CBI** இயக்குநராக மீண்டும் பொறுப்பேற்ற அலோக் குமார் (Alok Verma) வர்மாவின் பதவி (11.1.2019) அன்று பறிக்கப்பட்டது.

## ➢ உலக சூரியக் (GSC) தலைவராக "பிரணவ் ஆர்.மேத்தா" தேர்வு

- உலக சூரியக் குழு அமைப்பின் (GSC, Global Solar Council) தலைவரான பிரணவ் ஆர்.மேத்தா (Pranav R.Mehta) தேர்வு செய்யப்பட்டுள்ளார். உலக சூரியக் குழு அமைப்பின் தலைவராகியுள்ள முதலாவது இந்தியர் பிரணவ் ஆர்.மேத்தா ஆவார்.

## ➢ ஊடக சுதந்திர கூட்டணி தலைவராக 'இந்து' என்.ராம் நியமனம்

- ஊடக சுதந்திரத்துக்கான கூட்டணியின் (AFMF) தலைவராக 'இந்து' என்.ராம் (N.Ram appointed as president of Alliance for Media Freedom) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

CHENNAI IAS ACADEMY

## IMF அமைப்பின் தலைமை பொருளாதார ஆலோசகர் "கீதா கோபிநாத்"

- சர்வதேச நிதியத்தின் (IMF/International Monetary Fund) 11-வது தலைமை பொருளாதார ஆலோசகராக (chief economist of IMF), இந்திய-அமெரிக்க பெண்மணி கீதா கோபிநாத் (Gita Gopinath, 48 வயது) நியமிக்கப்பட்டுள்ளார்.
- IMF அமைப்பில் தலைமை பொருளாதார ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி (First female chief economist) "கீதா கோபிநாத்" ஆவார்.
- கீதா கோபிநாத் தற்போது கேரள முதல்வர் பினராயி விஜயனின் பொருளாதார ஆலோசகராக உள்ளார். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியையாக பணியாற்றி வருகிறார்.
- **சர்வதேச நிதியம் (IMF)**
- அமெரிக்காவின் வாஷிங்டன் நகரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டும், சர்வதேச நிதியம் (IMF) 189 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டது.
- உலகளாவிய நிதி ஒத்துழைப்பு, நிதி ஸ்திரத்தன்மை, சர்வதேச வர்த்தக வசதிகளை ஏற்படுத்தி தருதல் போன்றவை IMF-ன் முக்கிய பணிகள் ஆகும்.

## CBI இயக்குநராக "அலோக் வர்மா" பதவியேற்பு

- CBI இயக்குநராக (08th January 2019), அலோக் வர்மா (Alok Verma) மீண்டும் பதவியேற்றுக் கொண்டார்.
- மத்திய அரசு, CBI இயக்கு அலோக் வர்மாவை,கட்டாய விடுப்பில் அனுப்பிய, உத்தரவை உச்சநீதிமன்றம், அவரை மீண்டும் அப்பொறுப்பில் நியமித்தது.

## வங்கதேச பிரதமராக "ஷேக் ஹசீனா" பதவியேற்பு

- வங்கதேச நாட்டின் பிரதமராக 4-ஆவது முறையாக ஷேக் ஹசீனா அவர்கள் (7.1.2019) பொறுப்பேற்றுக் கொண்டார். வங்கதேச பொதுத் தேர்தலில் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கூட்டணி வெற்றி பெற்றது.

## தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக்கவுன்சில் துணைத்தலைவர்: மயில்சாமி அண்ணாதுரை

- தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப கவுன்சிலின் (Tamil Nadu State Council for Science and Technology) துணைத் தலைவராக இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை (Mylswamy Annadurai) நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரேசில் அதிபர் ஜெயர் போல்சன்

- பிரேசில் நாட்டின் புதிய அதிபராக (Brazil President) ஜெயர் போல்சன் (Jair Bolsonaro) பதவியேற்றுள்ளார்.

CHENNAI IAS ACADEMY

## ➢ இந்தியாவின் தலைமை தகவல் ஆணையராக "சுதிர் பார்கவா" பதவியேற்பு

- நாட்டின் **புதிய தலைமை தகவல் ஆணையராக** (Chief Information Commissioner) "சுதிர் பார்கவா" (Sudhir Bhargava) **டெல்லியில் ஜனவரி 1 அன்று** பதவி ஏற்றுக் கொண்டார். குடியரசுத் தலைவர் **ராம் நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம்** செய்து வைத்தார்.
- மேலும் 4 **தகவல் ஆணையர்களை நியமித்து குடியரசுத் தலைவர்** ராம் நாத் **கோவிந்த்** உத்தரவிட்டுள்ளார்.

1. **யஷ்வர்தன் குமார் சின்ஹா**
2. **வனஜா என்.சர்னா**
3. **நீரஜ் குமார் குப்தா**
4. **சுரேஷ் சந்திரா**

## ➢ ஆந்திரா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக "பிரவீன் குமார்" பதவியேற்பு

- புதிதாக உருவாக்கப்பட்ட **ஆந்திரா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக "பிரவீன் குமார்" ஜனவரி** 01,2019 அன்று பதவி ஏற்றுக்கொண்டார்.
- ஆந்திரா மாநிலத்தின் புதிய தலைநகராமான **அமராவதி நகரில் 2019 ஜனவரி** 1 முதல் தேதியில் இருந்து செயல்பட தொடங்கியுள்ளது.
- ஆந்திரா மாநில உயர் நீதிமன்றம் **இந்தியாவின் 25-வது உயர்நீதிமன்றமாகும்.**

## ➢ சென்னை ரெயில் பெட்டி தொழிற்சாலை பொது மேலாளராக "அஜய்குமார் சிங்" நியமனம்

- **சென்னையில்** உள்ள **பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலையின் புதிய பொது மேலாளராக அஜய்குமார் சிங்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## ➢ ரயில்வே வாரிய தலைவராக "வி.கே.யாதவ்" நியமனம்

- **இரயில்வே வாரியத்துக்கு புதிய தலைவராக "வி.கே.யாதவ்"** அவர்கள் நியமிக்கபடுள்ளார்.
- ரயில்வே வாரியத் தலைவராக இருந்த **அஸ்வானி லோஹானி டிசம்பர்** 31 அன்றுடன் ஓய்வு பெற்றார்.

## ➢ தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் நிர்வாகத் தலைவர்

❖ நீதிபதி அர்ஜான் குமார் சிக்ரியை தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (National Legal Services Authority-NALSA) செயல் தலைவராக குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.

CHENNAI IAS ACADEMY

- இந்த NALSA ஆனது சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் 1987-ன் கீழ் அமைக்கப்பட்டது.
- சமுதாயத்தில் நிலிவடைந்த பிரிவினர்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குவதற்காகவும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக லோக் அதாலத்தை அமைப்பதற்காகவும் இது நிறுவப்பட்டது.
- இந்தியாவின் தலைமை நீதிபதி இதன் ஆதரவுத் தலைவராகவும் உச்சநீதி மன்றத்தின் மூத்த நீதிபதி இந்த ஆணையத்தின் நிர்வாகத் தலைவராகவும் இருப்பர்.

# மாநாடுகள்

## சர்வதேச புலிகள் கணக்கெடுப்பு மாநாடு 2019

- 2019 ஜனவரி 28-29 தேதிகளில், புது டெல்லியில் மூன்றாவது புலிகள் கணக்கெடுப்பு பற்றிய சர்வதேச மாநாடு (International Stock Taking Conference on Tiger Conservation 2019) நடைபெற்றது.

## மண்ணின் மொழிகள் குறித்த உலகளாவிய கருத்தரங்கம் 2019

- ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2019-ம் ஆண்டை மண்ணின் மொழி ஆண்டாக (2019-International Year of Indigenous Language) அறிவித்துள்ளது.
- Global Launch Event of IYIL 2019 (28 January 2019,UNESCO House, Paris, France)
- ஒரு மொழி தேய்ந்து அழிவதும், பண்பாடு ஒடுங்கிவிடுவதும், அந்த பண்பாடு உலகளாவிய அளவில் பரவுவதை தடுக்கும் விதமாக உலகளாவிய கருத்தரங்கம் 28.1.2019 அன்று பிரான்ஸ் நாட்டில் யுனெஸ்கோ அரங்கில் நடக்கிறது.
- இந்த கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் கலந்து கொள்கிறார்.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாடு (PBD) 2019

- உத்தரப் பிரதேச மாநிலம் வாராணசி நகரில்,15-ஆவது வெளிநாடுவாழ் இந்தியர்கள் தின (15th Pravasi Bharatiya Divas, Convention, 21-23 January 2019, Varanasi, Uttar Pradesh) மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி 21.1.2019 தொடங்கி வைத்தார்.
- **2019 வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாட்டின் (2019 PBD Theme) கருப்பொருள்:**
- "புதிய இந்தியாவை உருவாக்குவதில் இந்திய புலம்பெயர்ந்தோரின் பங்கு" (Role of Indian Diaspora in building New India), என்பதாகும்.

CHENNAI IAS ACADEMY

- வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாடு, வழக்கமாக ஜனவரி 9-ஆம் தேதி நடைபெறும். உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில் (அலாகாபாத்) நடைபெறும் கும்பமேளா மற்றும் 70-ஆவது இந்திய குடியரசு தின விழாவிலும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பங்கேற்க வசதியாக இந்த மாநாடு இந்த முறை 2019 ஜனவரி 21 முதல் 23-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.
- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகமும் உத்தரப் பிரதேச அரசும் ஒன்றிணைந்து இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.
- இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த "மோரீஷஸ் பிரதமர் பிரவீண் ஜகந்நாத்" பங்கேற்றுள்ளார்.

## ➢ இந்திய-நேபாள தொழில்முனைவோர் மாநாடு 2019

- இந்திய-நேபாள தொழில்முனைவோர் மாநாடு 2019 (India, Nepal Entrepreneurship Conclave 2019), நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டு நகரில் (19.1.2019) நடைபெற்றது.
- இந்தியா-நோபாள தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடந்த ஒரு நாள் மாநாடு. மாநாட்டில், 400 இந்தியத் தொழில்முனைவோர்கள், நேபாளத் தொழில்முனைவோர்கள், முதலீட்டாளர்கள், பங்கேற்றனர்.

## ➢ உலக முதலீட்டாளர் மாநாடு 2019, குஜராத்

- குஜராத் மாநிலம், காந்திநகரில் உலக முதலீட்டாளர்களை கவர்வதற்கான 'துடிப்பான குஜராத் உலகளாவிய மாநாடு' மற்றும் கண்காட்சியை (Vibrant Gujarat Global Summit 2019) பிரதமர் நரேந்திர மோடி (18.1.2019) தொடங்கி வைத்தார்.
- எளிதில் தொழில் தொடங்கி நடத்துவதற்கு உகந்த 50 முன்னணி நாடுகளின் பட்டியலில், இந்தியா தற்போது 77-வது இடத்தில் உள்ளது.

## ➢ உலக ஆரஞ்சு திருவிழா 2019

- மகாராஷ்டிர மாநிலம் நாக்பூர் நகரில், 2019 உலக ஆரஞ்சு திருவிழா (World Orange Festival 2019, Nagpur) ஜனவரி 18 முதல் 21 வரை நடைபெறுகிறது. 2019 இந்த ஆண்டு நடப்பது இரண்டாவது உலக ஆரஞ்சு திருவிழா (2nd World Orange Festival) ஆகும்.

CHENNAI IAS ACADEMY

## ➤ உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2019

- அமெரிக்காவின் சிகாகோ நகரில் 2019 ஜூலை 4 முதல் 7 வரை 10-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு (10th World Tamil Conference, Chicago, 2019) நடைபெற உள்ளது.
- அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றம், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவை மற்றும் சிகாகோ தமிழ் சங்கம் ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.

## ➤ பிரயாக்ராஜ் நகரில் "கும்பமேளா" தொடக்கம்

- 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிற கும்பமேளா, உத்தரபிரதேச மாநிலத்தில் பிரயாக்ராஜ் (அலகாபாத்) நகரில் 2019 ஜனவரி 15 அன்று (15.1.2019) கோலாகலமாக தொடங்கியது (Prayagraj Ardh Kumbh Mela, 2019).
- கும்பமேளா 2019 மார்ச் மாதம் 4-ந் தேதி வரை 50 நாட்கள் தொடர்ந்து நடைபெறுகிறது.
- பிரயாக்ராஜ் நகரில் கங்கை, யமுனை, (கண்ணுக்கு புலப்படாத) சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிப்பதாகவும், இது திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது.
- கும்பமேளாவையொட்டி பிரயாக்ராஜ் நகரில், மக்களுக்கு ஆங்கிலம், குஜராத்தி, மராத்தி, கன்னடம், தமிழ், மலையாளம் ஆகிய 6 மொழிகளில் ரெயில்கள் வருகை, புறப்பாடு அறிவிப்புகளை வெளியிட இந்திய ரெயில்வே ஏற்பாடு செய்துள்ளது.

## ➤ 2019 ரைசினா உரையாடல் (Raisina Dialogue), புது டெல்லி

- 2019 ஜனவரி 8 ஆம் தேதி, நான்காவது ரைசினா உரையாடல் (Raisina Dialogue 2019), புது டெல்லியில் தொடங்கியது. 2019 ஜனவரி 8-10 வரை 3 நாட்கள் நடைபெறுகின்றன.
- 2019 Raisina Dialogue, "உலக மறு வரிசை: புதிய வடிவவியல்கள்: திரவ பங்களிப்புகள்: நிச்சயமற்ற விளைவுகள்" (A World Reorder: New Geometries: Fluid Partnerships: Uncertain Outcomes) என்ற கருப்பொருளில் நடைபெறுகிறது.
- Raisina Dialogue, இந்தியாவின் தலைமையில் ஆண்டுதோறும் நடைபெறும், புவிசார் அரசியல் (geopolitical) மற்றும் புவிசார் மூலோபாய (Geostrategic) Geostrategic மாநாடு ஆகும்.

## ➤ உலகளாவிய விமானப் போக்குவரத்து உச்சி மாநாடு (GAS) 2019

- 2019 ஜனவரி 15 முதல் 16 வரை, உலகளாவிய விமானப் போக்குவரத்து உச்சி மாநாடு (GAS-2019/Global Aviation Summit) மும்பையில் நடைபெற உள்ளது.

CHENNAI IASACADEMY

- "Flying for all" என்ற கருப்பொருளில் முதல் இந்த உச்சி மாநாடு (GAS-2019) நடைபெறுகிறது.

## ➢ உலகளாவிய சுகாதார உச்சி மாநாடு (GHS) 2019

- 2019 ஜூலை 21 முதல் 24 வரை, தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரில், 13-வது உலகளாவிய சுகாதார உச்சி மாநாடு (GHS-Global Healthcare Summit-2019) நடைபெற உள்ளது.

## ➢ நியுடெல்லி உலகப் புத்தக கண்காட்சி 2019

- 27-வது நியுடெல்லி உலகப் புத்தக கண்காட்சியை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் ஜனவரி 5 அன்று (New Delhi World Book Fair, NDWBF 2019), தொடங்கி வைத்தார்.
- நியுடெல்லி உலகப் புத்தக கண்காட்சி 2019, ஜனவரி 5 முதல் 13 வரை நடைபெறுகிறது.
- ஷார்ஜா அரசின் மக்கள் தொடர்பு துறை தலைவரான ஷேக் பஹிம் பின் சுல்தான் அல் காசிமி, சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

## ➢ சர்வதேச உவர்நீர் மீன்வளர்ப்பு மாநாடு (BRAQCON) 2019, சென்னை

- சர்வதேச உவர்நீர் மீன்வளர்ப்பு மாநாடு (BRAQCON 2019) 2019 ஜனவரி 22 முதல் 25 வரை சென்னை, மத்திய உவர்நீர் மீன் வளர்ப்புக் கழகத்தில் (CIBA-Central Marine Fisheries Research Institute) நடத்தவுள்ளது.
- இந்த மாநாட்டை மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் சிங் தொடங்கிவைக்கவுள்ளார்.

## ➢ இந்திய அறிவியல் மாநாடு (ISC) 2019, பஞ்சாப்

- 106-வது இந்திய அறிவியல் மாநாடு **(Indian Science Congress 2019), பஞ்சாப்** மாநிலத்தில், ஜலந்தர் நகரில் உள்ள **லவ்லி ப்ரோபிஸனல் பல்கலைக்கழகத்தில்** (Lovely Professional University), **ஜனவரி** 3 அன்று **பிரதமர் நரேந்திர மோடி** அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.
- 2019 **ஜனவரி** 3 **முதல்** 7 வரை, **'எதிர்கால இந்தியா: அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்'** என்ற பெயரில் (Future India: Science and Technology) நடைபெறுகிறது.

## ➢ இந்திய சமூக அறிவியல் மாநாடு 2018, ஒடிசா

- **ஒடிசா மாநிலம் புவனேஸ்வர்** நகரில், **42-வது இந்திய சமூக அறிவியல் மாநாடு** 2018 (ISSC-Indian Social Science Congress) **டிசம்பர்** 27 அன்று தொடங்கியது.

# விருதுகள்

## ➢ ஸ்வஸ்த் பாரத் யாத்ரா: சிறந்த மாநிலமாக "தமிழ்நாடு" தேர்வு

- 2019 ஜனவரி 28 ஆம் தேதி, 'ஸ்வஸ்த் பாரத் யாத்ரா' (Swasth Bharat Yatra) தேசிய பிரச்சார இயக்கத்தில் தமிழ்நாடு ஒட்டுமொத்த அளவில் சிறந்த மாநிலமாக (Best State Overall) அறிவிக்கப்பட்டுள்ளது.
- 'ஸ்வஸ்த் பாரத் யாத்ரா' பிரச்சாரம் இந்தியாவின் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் (FSSAI) 100 நாள் நுகர்வோர் சேவை திட்டம் ஆகும், இது அக்டோபர் 16, 2018 அன்று தொடங்கப்பட்டது.

## ➢ 2018 சாகித்ய அகாடமி விருதுகள் - வழங்கப்பட்டது

- 2018-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்ட 24 இலக்கியவாதிகளுக்கு டெல்லியில் சாகித்ய அகாடமி தலைவர் சந்திரசேகர கம்பரா ஜனவரி 29 அன்று விருது வழங்கினார்.
- தமிழ் மொழியில், 'சஞ்சாரம்' என்ற நாவலுக்காக எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் சாகித்ய அகாடமி விருது பெற்றார்.

## ➢ பாரத ரத்னா விருதுகள் 2019

- 2019-ஆம் ஆண்டு பாரத ரத்னா விருதுகள் பிரணாப் முகர்ஜி, நானாஜி தேஷ்முக், புபேன் ஹசாரியா ஆகியோருக்கு 26.1.2019 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது ஆகும்.

1. **பிரணாப் முகர்ஜி** (முன்னாள் குடியரசுத் தலைவர்)
2. **நானாஜி தேஷ்முக்** (ஜனசங்க தலைவர்)
3. **புபேன் ஹசாரியா** – (பிரபல பாடகர்)

- இவர்களில் நானாஜி தேஷ்முக், புபேன் ஹசாரியா ஆகியோருக்கு, மறைவுக்கு பின் இந்த விருது வழங்கப்பட்டு இருக்கிறது.
- 2015-ம் ஆண்டு முன்னாள் பிரதமர் வாஜ்பாய், பிரபல கல்வியாளர் மதன்மோகன் மாளவியா (மறைவுக்கு பின்) ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.
- அதன்பிறகு கடந்த 3 ஆண்டுகளாக இந்த விருது யாருக்கும் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டில் 3 பேருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.
- இதற்கு முன்பு 45 பேருக்கு பாரத ரத்னா வழங்கி மத்திய அரசு கௌரவித்துள்ளது.

CHENNAI IAS ACADEMY

### ➢ பிரணாப் முகர்ஜி

- மேற்கு வங்காள மாநிலத்தைச் சேர்ந்த பிரணாப் முகர்ஜி இந்தியாவின் 13-வது குடியரசுத் தலைவராக பதவி வகித்தவர்.
- காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக விளங்கிய இவர் பல்வேறு காலகட்டங்களில் மத்திய அரசில் நிதி, ராணுவம், வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்துள்ளார்.
- திட்டக்கமிஷன் தலைவராகவும் பொறுப்பு வகித்து உள்ளார்.

### ➢ நானாஜி தேஷ்முக்

- மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நானாஜி தேஷ்முக், பாரதீய ஜனசங்கத்திலும், ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்திலும் அங்கம் வகித்தவர். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். 1999-ம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கியது.
- நானாஜி தேஷ்முக் 2010-ம் ஆண்டு பிப்ரவரி 27-ந் தேதி தனது 93 வயதில் மரணம் அடைந்தார்.

### ➢ புபேன் ஹசாரியா

- அசாம் மாநிலத்தைச் சேர்ந்த புபேன் ஹசாரியா பின்னணி பாடகர், கவிஞர், இசையமைப்பாளர், திரைப்பட தயாரிப்பாளர் என பன்முக திறன் கொண்டவர்.
- பத்ம விபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, தாதாசாகேப் பால்கே, அசாம் ரத்னா உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.
- 2011-ம் ஆண்டு நவம்பர் 5-ந் தேதி தனது 85 வயதில் மரணம் அடைந்தார்.

### ➢ பத்ம விருதுகள் 2019

- 2019 –ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் 26.1.2019 அன்று அறிவிக்கப்பட்டன.
- பத்ம விருதுகள் மொத்தம் 112 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- **2019 பத்ம விருதுகள்**
- பத்ம விபூஷண் விருது – 4 பேர்
- பத்ம பூஷண் - 14 பேர்
- பத்மஸ்ரீ விருது – 94 பேர்
- பெண்கள் - 21 பேர்
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் - 11 பேர்
- திருநங்கை – ஒருவர் (நர்த்தகி நடராஜ்)

CHENNAI IAS ACADEMY

## ➢ பத்ம விபூஷண் விருது 2019 (04)

1. தேஜன்பாய் - நாட்டுப்புற பாடகர், சத்தீஷ்கார்
2. அனில்குமார் மனிபாய் நாயக் - தொழில் அதிபர், மகாராஷ்டிரா
3. பல்வந்த் மோரேஷ்வர் புரந்தரே – நாடக கலைஞர், மகாராஷ்டிரா
4. இஸ்மாயில் உமர் குல்லே – பொது விவகாரங்கள், ஜிபோட்டி, ஆப்பிரிக்கா

## ➢ பத்ம பூஷண் விருது 2019 (14)

1. ஜான் சேம்பர்ஸ் (வெளிநாட்டவர்) – அமெரிக்கா
2. சுக்தேவ் சிங் திந்த்சா – பொது விவகாரங்கள் - பஞ்சாப்
3. பிரவின் கோர்டன் (வெளிநாட்டவர்) – பொது விவகாரங்கள் - தென்னாப்பிரிக்கா
4. மகாசியா தூரம் பால் குலாட்டி – வர்த்தகம் &amp: கைத்தொழில்-உணவு பதப்படுத்துதல் - தில்லி
5. தர்ஷன் லால் ஜெயின் - சமூக வேலை - ஹரியானா
6. அஷோக் லக்ஷ்மிரார ாா குகடே – மருத்துவம் - கட்டுப்படியாகக்கூடிய சுகாதார பாரமரிப்பு-மகாராஷ்டிரா
7. கரியா முண்டா – பொது விவகாரங்கள் - ஜார்கண்ட்
8. புதடித்யா முகர்ஜி – கலை-இசை-சிதார்-மேற்கு வங்கம்
9. மோகன்லால் விஸ்வநாதன் நாயர்-கலை–நடிப்பு-திரைப்படம்-கேரளா
10. எஸ்.நம்பி நாராயணன் - அறிவியல் மற்றும் பொறியியல்-விண்வெளி-கேரளா
11. குல்தீப் நாயர் (இறையியல்) – இலக்கியம் &amp: கல்வி (பத்திரிகை)- தில்லி
12. பச்சேந்திரி பால் - விளையாட்டு (மலையேறுதல்) – உத்தரகண்ட்
13. வி.கே.ஷங்குங் - சிவில் சர்வீஸ் - டெல்லி
14. ஹுக்தேவ் நாராயண் யாதவ்- பொது விவகாரங்கள் - பீகார்

## ➢ 'பத்மஸ்ரீ' விருதுகள் 2019 (94)

- தமிழ்நாட்டை சேர்ந்த 7 பேர் உள்ளிட்ட 94 பேருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

## ➢ தமிழ்நாட்டை சேர்ந்த 'பத்மஸ்ரீ' விருது பெற்றுள்ளவர்கள்

- பங்காரு அடிகளார் - மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்த பீட ஆன்மிக குரு
- சரத் கமல் - டேபிள் டென்னிஸ் வீரர்
- நர்த்தகி நடராஜ் - பரதநாட்டிய கலைஞர் (திருநங்கை)
- மதுரை சின்னப்பிள்ளை – சமூகசேவகி
- டாக்டர் ஆர்.வி.ரமணி – கண் சிகிச்சை நிபுணர்
- ஆனந்தன் சிவமணி – டிரம்ஸ் இசைக்கலைஞர்
- டாக்டர் ராமசாமி வெங்கடசாமி –அறுவை சிகிச்சை நிபுணர்

CHENNAI IAS ACADEMY

- கர்நாடகா மாநிலத்தின் பெயரில் நடிகர் பிரபுதேவா அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## பத்மஸ்ரீ வென்ற விளையாட்டு வீரர்கள்

- சரத்கமல் - டேபிள் டென்னிஸ் - தமிழ்நாடு
- கவுதம் கம்பீர் - கிரிக்கெட் அணி
- சுனில் சேத்ரி – கால் பந்து அணியின் கேப்டன்
- அஜய் தாகூர் - கபடி அணி
- செஸ் வீராங்கனை ஹரிகா,
- வில்வித்தை மங்கை பம்பையலா தேவி
- கூடைப்பந்து வீராங்கனை பிரசாந்தி சிங்
- மல்யுத்த வீரர் பஜ்ரங் பூனியா
- பச்சேந்திரி பால் - மலையேற்றம் - உத்தரகாண்ட்

## பத்மஸ்ரீ விருதை "கீதா மேத்தா" ஏற்க மறுப்பு

- இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் கீதா மேத்தா, ஆற்றிய சேவைகளைக் கருத்தில் கொண்டு 2019 ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருது வழங்குவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் சகோதரியும், எழுத்தாளருமான கீதா மேத்தா, தனக்கு மத்திய அரசு அறிவித்துள்ள பத்மஸ்ரீ விருதினை ஏற்க மறுத்துள்ளார்.

## தமிழ்நாடு குடியரசு தின விழா விருதுகள் 2019

- தமிழ்நாடு குடியரசு தின விழா விருது பெற்றவர்கள் விவரம்
- அண்ணா பதக்கம் (வீர தீர செயல்கள்) 2019
- நா.சூர்யகுமார் - திருமங்கலம், சென்னை
- க.ரஞ்சித்குமார் - போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்
- ரா.ஸ்ரீதர் - மேலையூர், தஞ்சாவூர் மாவட்டம்

## காந்தியடிகள் காவலர் பதக்கம் 2019

1. ரா.வேதரத்தினம் - கூடுதல் காவல் கண்காணிப்பாளர், கடலூர், மாவட்டம்
2. அ.பிரகாஷ், காவல் ஆய்வாளர், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்
3. கோ.ராஜேந்திரன் - காவல் உதவி ஆய்வாளர், விக்கிரமங்கலம், அரியலூர் மாவட்டம்
4. ரே.திருக்குமார் - சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், திருச்சி, காந்தி மார்க்கெட்
5. பெ.கோபி-தலைமைக் காவலர், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்

CHENNAI IAS ACADEMY

## வேளாண்மைத் துறை சிறப்பு விருது

1. சே.சேவியர் - செட்டியாபட்டி, புதுக்கோட்டை மாவட்டம் (திருத்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம்)

## கோட்டை அமீர் விருது

1. மத நல்லிணக்கத்துக்காக பாடுபட்டவர்களுக்கு கோட்டை அமீர் என்ற பெயரில் விருது-அறிவிக்கப்படவில்லை.

## அசோக் சக்ரா விருது 2019: காஷ்மீர் ராணுவ வீரர் "நசிர் அகமது வானி"

- 2019 குடியரசு தினவிழாவில் அசோக் சக்ரா விருது காஷ்மீர் மாநிலத்தை சேர்ந்த ராணுவ வீரர் நசிர் அமகது வானி அவர்களுக்கு மரணத்திற்கு பிறகு வழங்கப்படுகிறது. (Lance Naik Nazir Wani, Ashok Chakra 2019).
- முதல் முறையாக காஷ்மீரை சேர்ந்த ஒருவருக்கு அசோக் சக்ரா விருது வழங்கப்படுகிறது.
- ராணுவத்தில் வீரதீர செயல் மற்றும் தன்னலமற்ற உயிர் தியாகத்தை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு மிக உயரிய காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தை சேர்ந்த நசிர் அகமது வானி (வயது 38) என்ற அந்த வீரர், 2018 நவம்பர் 25-ந் தேதி சோபியானில் 6 பயங்கரவாதிகளுக்கு எதிராக நடந்த சண்டையில் "நசிர் அகமது வானி" வீரமரணம் அடைந்தார்.
- நசிர் அகமது வானியின், தீரமிக்க செயலாற்றில், உயிர்தியாகத்தை பாராட்டி அவருக்கு அசோக் சக்ரா விருது வழங்கப்படுகிறது.
- டெல்லியில் 26.1.2019 அன்று நடைபெறும் குடியரசு தினவிழாவில் அவரது மனைவி மகஜாபீனிடம் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இந்த விருதை வழங்குகிறார்.

## பெண் குழந்தைகள் பாதுகாப்பு: தமிழ்நாடு அரசுக்கு 2 விருதுகள்

- டெல்லியில் நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் (24.1.2019), பெண் குழந்தைகள் பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்டதற்காக, தமிழ்நாடு அரசுக்கு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் 2 விருதுகள் வழங்கப்பட்டன.
- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேனகா காந்தி இந்த விருதுகளை வழங்கினார்.

## தமிழ்நாடு அரசு பெற்ற 2 விருதுகள்

- மத்திய அரசின் திட்டமான 'பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்' என்ற திட்டத்தை இந்திய அளவில் சிறப்பாக செயல்படுத்தியதற்காக தமிழக அரசுக்கு விருது வழங்கப்பட்டது.

CHENNAI IAS ACADEMY

- மக்கள் மத்தியில் இந்த திட்டத்தை சிறப்பாக எடுத்துச் சென்றதில் முதலிடம் பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்துக்கும் விருது வழங்கப்பட்டது.

## ➢ சிறப்பு அழைப்பாளர் - மாணவி நந்தினி

- குழந்தை பருவத்தில் தனக்கு நடைபெற இருந்த திருமணத்தை தடுத்து நிறுத்தியவரும், தமிழக அரசின் விருது பெற்ற குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வாளருமான திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 11-ம் வகுப்பு மாணவி நந்தினி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

## ➢ இந்திய அமெரிக்கர் "குரிந்தர் சிங் கல்சா" வுக்கு 'ரோசா பார்க்ஸ்' விருது

- அமெரிக்காவில் சீக்கியர்களுக்கு எதிராக இருந்த கொள்கைகளுக்கு எதிராக பிரசாரம் செய்த இந்திய அமெரிக்கரும், சீக்கியருமான "குரிந்தர் சிங் கல்சா" வுக்கு, "இன்டியானா" நாளிதழ் "ரோசா பார்க்ஸ் முன்னோடி" விருது வழங்கி கௌரவித்துள்ளது (2019 Rosa Parks award for Indian-American Sikh, Gurinder Singh Khalsa).
- அமெரிக்காவில் கருப்பின மக்களிடையே வெள்ளையின மக்கள் காட்டிய பாகுபாட்டை களைவதற்காக போராடிய ரோசா பார்க்ஸ் (Rosa Parks, American activist) என்ற பெண்மணியின் நினைவாக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

## ➢ 2019 பிராங்கோ-ஜெர்மன் மனித உரிமை விருது:யூ வென்செங் (Yu Wensheng)

- சீனாவில் தடுப்புக் காவலில் உள்ள சீன வழக்கறிஞர், யூ வென்செங் (Yu Wensheng), 2019-ஆம் ஆண்டின் பிராங்கோ-ஜெர்மன் மனித உரிமைகள் விருதை (Franco-German Human Rights Award) பெற்றுள்ளார்.

## ➢ பிலிப் கோட்லர்-பிரசிடென்ஷியல் விருது 2019: நரேந்திர மோடி

- 2019 ஆண்டுக்கான பிலிப் கோட்லர்-பிரசிடென்ஷியல் விருது (Philip Kotler Presidential award), பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பிலிப் கோட்லர் விருதைப் பெறும் முதல் அரசியல் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.
- நவீன கால சந்தைப்படுத்துதலின் தந்தை என பிலிப் கோட்லர் அறியப்படுகிறார்.
- சந்தைப்படுத்தல் (Marketing) மற்றும் மேலாண்மைத் துறைகளில் சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டும் நோக்கில், ஆண்டுதோறும் பிலிப் கோட்லர் விருது அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், நிர்வாகத்தில் சிறந்து விளங்கும் உலக நாடுகளின் தலைவர்களுக்கும் இந்த விருது அளிக்கப்படுகிறது.

CHENNAI IAS ACADEMY

## திருவள்ளுவர் திருநாள் விருதுகள் 2019

- 2019 திருவள்ளுவர் திருநாளையொட்டி (Thiruvalluvar Day Awards 2019) தமிழ் வளர்ச்சிதுறை சார்பில் வழங்கப்படும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உணர்வுக்கும் தொண்டாற்றி பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்றத் தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் விருது உள்ளிட்ட ஒன்பது விருதுகளைப் பெறத் தகுதியானவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2019 ஆண்டுக்கான திருவள்ளுவர் திருநாள் விருதுகள் பெறுவோர் விவரம்:

- **திருவள்ளுவர் விருது:** எம்.ஜி.அன்வர் பாட்சா
- **தந்தை பெரியார் விருது:** சி.பொன்னையன்
- **அண்ணல் அம்பேத்கர் விருது:** மருத்துவர் சி.ராமகுரு
- **பேரறிஞர் அண்ணா விருது:** பேராசிரியர் மு.அய்க்கண்
- **பெருந்தலைவர் காமராசர் விருது:** பழ.நெடுமாறன்
- **மகாகவி பாரதியார் விருது:** பாவரசு மா.பாரதி சுகுமாரன்
- **பாவேந்தர் பாரதிதாசன் விருது:** கவிஞர் தியாரூ
- **தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது:** முனைவர் கு.கணேசன்
- **முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது:** சூலூர் கலைப்பத்தன்

## பூர்ண சந்திர தாபா-க்கு இந்திய ராணுவ ஜெனரல்" விருது

- நேபாள ராணுவத்தின் தலைமைத் தளபதி பூர்ண சந்திர தாபா (Nepal Army Chief, Purna Chandra Thapa) அவர்களுக்கு, "இந்திய ராணுவ ஜெனரல்" என்ற (General of Inian Army Award 2019) உயரிய விருது 13.01.2019 அன்று வழங்கப்படவுள்ளது.
- இந்தியா – நேபாளம் இடையே பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபின் அடிப்படையிலேயே நேபாள ராணுவத் தளபதிக்கு இந்திய ராணுவ ஜெனரல் விருது வழங்கப்படுகிறது.

CHENNAI IAS ACADEMY

# பொருளாதார நிகழ்வுகள்

## ➢ இந்தியா, வேகமாக வளரும் பொருளாதார சக்தி:IMF கணிப்பு

- சர்வதேச பொருளாதார வளர்ச்சி குறித்த தனது அறிக்கையை சர்வதேச செலாவணி நிதியம் (IMF) வாஷிங்டனில் 20.1.2019 அன்று வெளிட்டது.
- இந்த அறிக்கையில் (IMF World Economic Outlook January 2019), சர்வதேச அளவில் வேகமாக வளரும் பொருளாதார சக்தியாக இந்தியா நீடிக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.
- 2019-ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாகவும், 2020-ஆம் ஆண்டில் 7.7 சதவீதமாகவும் இருக்கும் என்று கணித்துள்ளது.
- 2018-ஆம் ஆண்டு இந்தியாவின் வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்தததுது.

## ➢ சீனாவின் பொருளாதார வளர்ச்சி குறைவு

- உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக சீனா விளங்குகிறது.
- சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2017-ஆம் ஆண்டு 6.8 சதவீதமாக இருந்தது.
- 1990 ஆம் ஆண்டு 3.9 சதவீதமாக இருந்த பிறகு, தற்போது, ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது (2018) பொருளாதர வளர்ச்சி 6.6 சதவீதமாக குறைந்துள்ளது.

## ➢ இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2018-19-ஆம் நிதியாண்டு-கணிப்புகள்

- 2018-19 நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எத்தனை சதவீதமாக இருக்கும் என பல்வேறு நிறுவனங்கள் கணிப்புகள் வெளியிட்டுள்ள, அவற்றின் விவரம்:

**1.மத்திய புள்ளியியல் அலுவலகம்-7.2%**

**2.ஆசிய மேம்பாட்டு வங்கி (ஏடிபி)-7.3%**

**3.பிட்ச் நிறுவனம்-7.2%**

## ➢ நிதியாண்டு வாரியாக இந்திய பொருளாதார வளர்ச்சி:

**1.2017-18-ஆம் நிதியாண்டு:6.7%**

**2.2016-17 நிதியாண்டு:7.1%**

**3.2015-16 நிதியாண்டு:8.2%**

CHENNAI IAS ACADEMY

## ➢ இந்திய நிதி நிலைத்தன்மை அறிக்கை

- ❖ வருடத்திற்கு இருமுறை ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் நிதிநிலைத் தன்மை அறிக்கையின் (Fiscal Stability Report-FSR) 2018 ஆம் ஆண்டிற்கான 18-வது வெளியீட்டை சமீபத்தில் RBI வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த FSR ஆனது நிதிநிலைத் தன்மைக்கான அபாயங்கள் மற்றும் நிதி அமைப்பின் தாங்குதிறன் ஆகியவற்றின் மீதான நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவினுடைய துணைக் குழுவின் கூட்டு மதிப்பீட்டைப் பிரதிபலிக்கிறது.
- ❖ உர்ஜித் படேலின் பதவி விலகலைத் தொடர்ந்து டிசம்பர் மாதம் சக்திகாந்த தாஸ் RBI-ன் ஆளுநராக பொறுப்பேற்ற பின் வெளியிடப்படும் முதல் அறிக்கை இதுவேயாகும்.
- ❖ 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 11.5% ஆக இருந்த பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் நிகர வாராக் கடன்களின் விகிதமானது 2018 செப்டம்பரில் 10.8% ஆக குறைந்துள்ளது.
- ❖ மறுசீரமைக்கப்பட்ட நிலையான முன்னேற்றங்களின் விகிதமானது 2018 செப்டம்பரில் 0.5% அளவில் சீராக வீழ்ச்சியடைந்துள்ளது.

## ➢ MSME துறையைப் புதுப்பிப்பதற்கான RBI குழு

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது செபியின் முன்னாள் தலைவரான U.K. சின்ஹாவின் தலைமையில் 8 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது.
- ❖ இந்த குழுவானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME-Micro, Small and Medium) பிரிவின் பொருளாதார மற்றும் நிதிநிலைத் தன்மைக்கான நீண்ட காலத் தீர்வுகளை வரிவாக பரிசீலித்து முன்மொழியும்.
- ❖ MSME பிரிவானது பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் GST நடைமுறைப்படுத்தலின் காரணமாக சிக்கல்களை எதிர்கொண்டு இருக்கின்றது.

## ➢ கேரளாவில் பேரழிவு செஸ் வரி – GST குழு ஒப்புதல்

- ❖ பீகாரின் துணை முதலமைச்சர் சுஷில் குமார் மோடியின் தலைமையிலான மாநில நிதியமைச்சர்களின் குழுவானது கேரளாவின் 1% பேரழிவு செஸ் வரிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்த பேரழிவு செஸ் ஆனது கேரளாவின் புனரமைப்புப் பணிகளுக்காக இரண்டு ஆண்டுகளுக்கு விதிக்கப்படும்.
- ❖ ஏதேனும் இயற்கைப் பேரழிவு அல்லது பேரழிவுகளின் போது கூடுதல் நிதிகளை சேர்க்க குறிப்பிட்ட காலத்திற்கு சிறப்பு வரிகளை விதிக்க GST சட்டம் வகை செய்துள்ளது.

CHENNAI IAS ACADEMY

## டிஜிட்டல் முறை பண வழங்கீட்டை மேம்படுத்து 5 உறுப்பினர்கள் குழு

- ரிசர்வ் வங்கியானது நாட்டில் பாதுகாப்பான டிஜிட்டல் பண வழங்கீட்டு முறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதற்காக 5 உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது.
- இந்த உயர்நிலைக் குழுவானது ஆதாரைக் கட்டமைத்தவரான நந்தன் நிலேகனியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த முடிவானது பணவழங்கீட்டை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் நிதி உள்ளடக்கலை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளது.

## உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2019

- உலக வங்கியானது "இருண்ட ஆகாயங்கள்" என்ற தலைப்பு கொண்ட 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆண்டில் முன்னேறிய பொருளாதாரங்களுக்கிடையேயான வளர்ச்சியானது 2 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வெளிச்சந்தைக்கான தேவை குறைந்து வருதல், அதிகரித்து வரும் கடன் செலவுகள் மற்றும் தொடர்ச்சியான கொள்கை நிச்சயமற்ற நிலைகள் ஆகியவை வளர்ந்து வரும் சந்தை மற்றும் மேம்பாட்டுப் பொருளாதாரங்களின் (EMDE – Emerging Market and Developing Economies) பார்வைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.
- இந்தியாவிலிருந்து மிகப்பெரிய அளவிலான பங்களிப்புடன் 2019 ஆம் ஆண்டில் தெற்காசியாவின் பொருளாதாரமானது 7.1% அளவிற்கு வளர்ச்சியடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## தங்கத்தைப் பணமாக்கும் திட்டம்

- அறக்கட்டளை நிறுவனங்கள்,
- மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும்
- மாநில அரசு நிறுவனங்கள்
- ஆகிய நிறுவனங்கள் தங்கத்தைப் பணமாக்கும் திட்டத்தின் கீழ் தங்கத்தை வைத்திருப்பதற்கு அனுமதிப்பதற்காக மத்திய ரிசர்வ் வங்கியானது தங்கத்தைப் பணமாக்கும் திட்டத்தில் (GMS – Gold Monetisation Scheme) மாற்றங்களை செய்துள்ளது.
- இத்திட்டமானது
- அறக்கட்டளை நிறுவனங்களில் உள்ள கணக்கில் வராத தங்கங்களை வெளிக் கொண்டு வருவது



CHENNAI IAS ACADEMY

- அரசாங்க அமைப்புகள் தாங்கள் பறிமுதல் செய்த தங்கங்களை வைப்பு வைக்க அனுமதிப்பது
- ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## ➢ UK சின்ஹா தலைமையிலான பணிக்குழு

- ❖ இந்திய நொடித்தல் மற்றும் திவால் நிலை வாரியம் (The Insolvency and Bankruptcy Board of India – IBBI) ஆனது செபியின் முன்னாள் தலைவரான UK சின்ஹாவின் தலைமையில் 11 உறுப்பினர்களைக் கொண்ட பணிக்குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்த பணிக்குழுவானது (7 உறுப்பினர்கள், 4 அழைப்பாளர்கள்) நிறுவன குழுமங்கள் நொடித்து போதல் குறித்த கருத்துகளை ஆய்வதோடு பொருத்தமான கட்டமைப்புகளையும் பரிந்துரை செய்யும்.
- ❖ தற்போது உள்ள திவால் மற்றும் நொடித்து போதல் விதிமுறையானது (Insolvency and Bankruptcy Code-IBC) தனிப்பட்ட நிறுவனங்களுக்கு கலைப்பு அல்லது பணம் செலுத்துதலை வழங்கும்.
- ❖ எனவே இது NCLT (National Company Law Tribunal) யின் அதிகார வரம்புகளில் பல நிறுவனங்களைக் கொண்ட பெரு நிறுவனக்குழுமங்களின் மொத்த சொத்துக்களின் மீதான தீர்மானம் அல்லது கலைப்புக்காக நொடித்தல் மற்றும் திவால் விதிமுறைகளுக்குள்ளாக ஒரு கட்டமைப்பை உருவாக்க முயல்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ➢ பரிவேஷ்

- ❖ தொழிலகங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியை உடனடியாக மற்றும் விரைவாக வழங்குவதற்காக வலைதள அடிப்படையிலான ஒற்றைச் சாளர அமைப்பான பரிவேஷ் என்ற வசதி அனைத்து மாநிலங்களிலும் ஜனவரி 15 ஆம் தேதி முதல் திறக்கப்படவுள்ளது.
- ❖ இது பல்வேறு ஆணையங்களிடமிருந்து சுற்றுச்சூழல், வனங்கள், வன உயிரிகள் மற்றும் கடலோர ஒழுங்காற்றுப் பகுதி ஆகியவற்றின் ஒப்புதலுக்காக ஏற்படுத்தப்படும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், ஒப்புதல் பெறுதல், முன்மொழிதல் ஆகியவற்றினைக் கண்காணிப்பதற்கான ஒரு தானியங்கி அமைப்பாகும்.

## ➢ பசுமை –Ag திட்டம்

- அரசானது உலகளாவிய சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் சிக்கலான பல்லுயிர்த்தன்மை மற்றும் வன நிலப்பரப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக

CHENNAI IAS ACADEMY

இந்திய வேளாண்மையை மாற்றுதல் எனும் திட்டத்தினை உலகளாவிய சுற்றுச்சூழல் வசதியுடன் இணைந்து தொடங்கியுள்ளது.

- இந்த திட்டானது உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து உயர் பாதுகாப்பு மதிப்புடைய கீழ்க்காணும் 5 மாநிலங்களின் நிலப்பரப்புகளில் செயல்படுத்தப்படும்.
- மத்தியப்பிரதேசம் - சாம்பல் நிலப்பரப்பு
- மிசோரம் - தம்பா நிலப்பரப்பு
- ஒடிசா – சிம்லிபால் நிலப்பரப்பு
- ராஜஸ்தான் - பாலைவன தேசியப் பூங்கா நிலப்பரப்பு
- உத்தரகாண்ட – கார்பெட் ராஜாஜி நிலப்பரப்பு
- இந்த பசுமை AG திட்டமானது பல்லுயிர்த்தன்மை, காலநிலை மாற்றம் மற்றும் நீடித்த நில மேலாண்மை குறிக்கோள்கள் மற்றும் நடைமுறைகளை இந்திய வேளாண்மையுடன் ஒருங்கிணைக்க முற்படுகிறது.

## $CO_2$ உமிழ்வைக் குறைக்க மெத்தனால் கலவை

- புனேவை அடிப்படையாகக் கொண்ட இந்திய தானியங்கி ஆராய்ச்சி சங்கமானது 15% மெத்தனாலைப் பெட்ரோலுடன் கலந்து 3000 கி.மீ. தொலைவுக்கு வாகனங்களை இயக்கி ஆய்வு செய்துள்ளது.
- இந்த ஆய்வானது தற்போதுள்ள BS-IV தரநிலையிலுள்ள கார்களில் மெத்தனால் கலந்து பெட்ரோல் பயன்படுத்தப்படும்போது $CO_2$ உமிழ்வானது கணிசமாக குறைவதை வெளிப்படுத்தியுள்ளது.

## யானைக்கால் நோய்க்கெதிரான 3 வகை மருந்துகள்

- மகாராஷ்டிராவானது உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து யானைக்கால் நோயை விரைவாக ஒழிக்க நாக்பூரில் 3 வகை மருந்து சிகிச்சையைப் பரிந்துரை செய்துள்ளது.
- பரவலாக யானைக்கால் நோய் என்றறியப்படும் நிணநீர் யானைக்கால் எனும் நோய் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகும்.
- நடிகரான ஸ்வப்னில் ஜோஷி இந்த திட்டத்தின் விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நோயானது கொசுக்கள் மூலமாக பரவுகிறது. இதன் தொற்றானது பொதுவாக குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டு நிணநீர் மண்டலத்தின் மறைவான சேதத்திற்கு காரணமாகிறது.

CHENNAI IAS ACADEMY

## ➢ மாநிலப் புலிகள் பாதுகாப்புப் படை – தெலுங்கானா

- மாநிலத்தில் புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்காக மாநில புலிகள் பாதுகாப்புப் படையை (State Tiger Protection Force) உருவாக்க தெலுங்கானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- தலைமைச் செயலாளர் எஸ்.கே.ஜோஷி தலைமையிலான மாநில வனப் பாதுகாப்புக் குழுவானது மாநில புலிகள் பாதுகாப்புப் படையை உருவாக்கும் முடிவை எடுத்துள்ளது.
- இந்தப் படைக்கான செலவை மாநில மற்றும் மத்திய அரசுகள் 40:60 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

## ➢ ICC புதிய தலைமை நிர்வாக அதிகாரி (CEO): மனு சவ்னி

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (International Cricket Council, ICC) புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) மனு சவ்னி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ➢ T20 உலகக்கோப்பை தொடர் 2020, ஆஸ்திரேலியா

- ஆஸ்திரேலியாவில் 2020 அக்டோபர் 18-ந்தேதி முதல் நவம்பர் 15-ந்தேதி வரை T20 உலகக்கோப்பை தொடர் நடக்கிறது. இந்த போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) ஜனவரி 29 அன்று வெளியிட்டுள்ளது.
- ICC தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. 9-வது மற்றும் 10-வது இடங்களில் உள்ள இலங்கை, வங்காளதேசம், மற்றும் 6 இதர அணிகள் தகுதி சுற்றில் விளையாட வேண்டும். இதில் இருந்து 4 அணிகள் தகுதி பெறும்.
- 'A' பிரிவு: பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ், நியூசிலாந்து, தகுதிபெறும் அணிகள்.
- 'B' பிரிவு: இந்தியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆப்பானிஸ்தான், தகுதிபெறும் அணிகள்.

## ➢ குறைந்த வயதில் அரைசதம் அடித்த வீரர் - ரோகித் பாடெல்

- ஒட்டுமொத்த சர்வதேச கிரிக்கெட்டில் "குறைந்த வயதில் அரைசதம் அடித்த வீரர்" என்ற சிறப்பை நேபாள கிரிக்கெட் அணியின் "ரோகித் பாடெல்" பெற்றுள்ளார்.
- ரோகித் பாடெலின் தற்போதைய வயது 16 ஆண்டு 146 நாட்கள் ஆகும்.
- ஐக்கிய அரபு அமீரகத்துக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ரோகித் பாடெல், 55 ரன் (58 பந்து) அடித்தார்.

CHENNAI IAS ACADEMY

- இதற்கு முன்பு இந்தியாவின் சச்சின் தெண்டுல்கர் 16 ஆண்டு 213 நாட்களில் சர்வதேச போட்டியில் குறைந்த வயதில் அரைசதம் அடித்தவர் என்ற சிறப்பை பெற்றிருந்தார்.

## ➢ சிட்னி மைதான கௌரவ உறுப்பினர்களான "வீரர் விராட் கோலி, ரவி சாஸ்திரி

- சிட்னி கிரிக்கெட் மைதான கௌரவ உறுப்பினர் (SCG-Sydney Cricket Ground honorary membership) என்ற சிறப்பை, இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி மற்றும் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி (Indian skipper Virat Kohli, coach Ravi Shastri) ஆகியோர் பெற்றுள்ளனர்.
- சிட்னி கிரிக்கெட் மைதான கௌரவ உறுப்பினர் என்ற சிறப்பை, விராட் கோலி, ரவி சாஸ்திரி ஆகியோர் தவிர சச்சின் டெண்டுல்கர் மற்றும் பிரெய்ன் லாரா ஆகியோர் பெற்றுள்ளனர்.

## ➢ 2018-19 பார்டர்-கவாஸ்கர் கோப்பையை வென்ற இந்திய அணி

- இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் இடையே நடைபெற்ற, 2019 பார்டர்-கவாஸ்கர்கோப்பைக்கான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் வென்றுள்ளது. இதன் மூலம் பார்டர்-கவாஸ்கர் கோப்பையை தக்கவைத்துக் கொண்டது.
- விராட் கோலி தலைமையிலான இந்திய அணி, ஆஸ்திரேலியாவால் முதல்முறையாக வரலாற்றுச் சிறப்புமிக்க டெஸ்ட் தொடர் வெற்றியை பெற்றுள்ளது.
- **ஆட்ட நாயகன் விருது, தொடர் நாயகன் விருது,** இந்திய மட்டை வீச்சாளர் சித்தேஸ்வர் புஜாரா அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- 1-வது டெஸ்ட் - இந்தியா வெற்றி (31 ரன்கள்)
- 2-வது டெஸ்ட் - ஆஸ்திரேலியா வெற்றி (146 ரன்கள்)
- 3-வது டெஸ்ட் - இந்தியா வெற்றி (137 ரன்கள்)
- 4-வது டெஸ்ட் - டிரா

## ➢ 2018 சிறந்த வீராங்கனை விருது: "ஸ்மிரிதி மந்தானா" தேர்வு

- **சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC)** சார்பில், **2018-ம் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா** தேர்வு செய்யப்பட்டார்.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் **சிறந்த வீராங்கனை விருது பெறும் 2-வது இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா** ஆவார்.
- 2007-ம் ஆண்டு இந்திய முத்த பவுலர் **ஜூலன் கோஸ்வாமி** இந்த விருதை பெற்றுள்ளார்.



CHENNAI IAS ACADEMY

- இரட்டை விருது
- 2018-ம் ஆண்டின் சிறந்த **ஒரு நாள் போட்டி வீராங்கனை விருதையும் 22 வயதான மந்தனா** பெற்றார்.
- 2018-ம் ஆண்டு ஜனவரி 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையான விருதுக்குரிய காலக்கட்டத்தில், **மந்தனா 12 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 669 ரன்களும், 20 ஓவர் கிரிக்கெட்டில் 25 ஆட்டங்களில் ஆடி 622 ரன்களும்** எடுத்துள்ளார்.

### ➢ சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் விருதுகள்

- **2018-ம் ஆண்டின் சிறந்த வீராங்கனை - ஸ்மிரிதி மந்தனா** (இந்தியா)
- **2018 ஒரு நாள் போட்டி சிறந்த வீராங்கனை - ஸ்மிரிதி மந்தனா** (இந்தியா)
- **2018 20 ஓவர் போட்டி சிறந்த வீராங்கனை – அலிசா ஹிலே** (ஆஸ்திரேலியா)
- **வளர்ந்து வரும் வீராங்கனை விருது – சோபி எக்லெஸ்டன்** (இங்கிலாந்து)

### ➢ ஆன்டி முர்ரே ஓய்வு - அறிப்பு

- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியுடன் பிரிட்டனைச் சேர்ந்த முன்னாள் உலகின் நம்பர் ஒன் வீரர் ஆன்டி முர்ரே (Andy Murray) ஓய்வு பெறவுள்ளார்.
- 77 ஆண்டுகளில் விம்பிள்டன் பட்டம் வென்ற முதல் பிரிட்டன் வீரர் முர்ரே ஆவார்.

## குத்துச்சண்டை

### ➢ குத்துச்சண்டை தரவரிசை 2019: மேரிகோம் முதலிடம்

- சர்வதேச குத்துச்சண்டை (International Boxing Association, AIBA) சம்மேளனம் (10.1.2019) வெளியிட்ட தரவரிசையில், இந்திய வீராங்கனை மேரிகோம் 48 கிலோ உடல் எடைப்பிரிவில் (1,700 புள்ளிகள்) முதலிடத்தை பிடித்துள்ளார்.
- உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் 6 முறை தங்கப்பதக்கம் வென்ற ஒரே வீராங்கனை என்ற சாதனையை படைத்தவர் மேரிகோம்.
- டெல்லியில் 2018 நவம்பர் மாதம் நடந்த உலக குத்துச்சண்டை போட்டியில், 48 கிலோ எடைப்பிரிவில் வாகை சூடியவர் மேரிகாம் ஆவார்.

### ➢ இந்திய பெண்கள் குத்துச்சண்டை பயிற்சியாளர் "முகமது அலி காமர்"

- இந்திய பெண்கள் குத்துச்சண்டை வீராங்கனைகளுக்கான (chief coach for the Indian woman boxers) தலைமை பயிற்சியாளராக "முகமது அலி காமர்" (Mohammed Ali Qamar) நியமிக்கப்பட்டுள்ளார்.

CHENNAI IAS ACADEMY

## ➢ தேசிய பெண்கள் குத்துச்சண்டை போட்டிகள், கர்நாடகா

- கர்நாடகா மாநிலம் விஜயநகரவில் மூன்றாவது தேசிய பெண்கள் குத்துச்சண்டை போட்டிகள், டிசம்பர் 31, 2018 முதல் 2019 ஜனவரி 6 வரை நடைபெற்றது. இப்போட்டியில் பதக்கம் வென்ற வீராங்கனைகள் விவரம்:
- லவ்லினா போர்கோகெயின் (68 கிலோ எடைப்பிரிவு)-தங்கப்பதக்கம்
- சிம்ரஞ்சித் கௌர் (69 கிலோ எடைப்பிரிவு)-தங்கப்பதக்கம்
- மஞ்சு ராணி (48 கிலோ எடைப்பிரிவு)-தங்கப்பதக்கம்
- மனிஷா மவுன் (54 கிலோ பிரிவு)-வெள்ளிப்பதக்கம்

### கால்பந்து

## ➢ அதிக கோல்களை அடித்த வீரர்கள்: "சுனில் சேத்ரி"-இரண்டாம் இடம்

- இந்தியா கால்பந்து அணி கேப்டன் சுனில் சேத்ரி, சர்வதேச கால்பந்து போட்டிகளில் தற்போது (7.1.2018) வரை, மொத்தம் 67 கோல்கள் அடித்துள்ளார்.
- இதன் மூலம் சுனில் சேத்ரி, சர்வதேச அளவில் அதிக கோல்களை அடித்த வீரர்கள் பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்துள்ளார்.

## ➢ சர்வதேச அளவில் அதிக கோல்களை அடித்த வீரர்கள் (7.1.2018)

1. கிறிஸ்டியானோ ரொனால்டோ – 85 கோல்கள் (154 போட்டிகள்)
2. சுனில் சேத்ரி – 67 கோல்கள் (105 போட்டிகள்)
3. லியோனல் மெஸ்ஸி – 65 கோல்கள் (128 போட்டிகள்).

### செஸ்

## ➢ இந்தியாவின் இளம் வயது கிராண்ட்ஸ்மாஸ்டர் "டி.குகேஷ்"

- சென்னை மாணவர் டி.குகேஷ் (D. Gukesh), 12 வயது 7 மாதம் 17 நாட்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்றுள்ளார்.
- இதன் மூலம் "குறைந்த வயதில் கிராண்ட்ஸ்மாஸ்டர் பட்டம் வென்ற இந்தியர்" என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- மேலும் உலகின் இரண்டாவது இளம் வயது கிராண்ட்ஸ்மாஸ்டர் (world's second youngest grand master) என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.
- 2017 ஜூன் மாதம் சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா (R Praggnanandhaa), 12 வயது 10 மாதத்தில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்று இருந்ததே சாதனையாக இருந்தது.அதனை குகேஷ் முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

CHENNAI IAS ACADEMY

- டெல்லியில் நடைபெற்ற, 2019 சர்வதேச ஓபன் செஸ் போட்டியில் (17th Delhi International Open Chess tournament) இந்த சாதனையை படைத்தார்.
- டி.குகேஷ், இந்தியாவின் 59-வது கிராண்ட்ஸ்மாஸ்டர் ஆவார்.
- 2002-ம் ஆண்டில் உக்ரைன் வீரர் செர்ஜி கர்ஜாகின் (Sergey Karjakin), 12 வயது 7 மாதத்தில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை பெற்றதே உலக அளவில் சாதனையாக உள்ளது.

## ➢ ரிஷப் பந்த் - உலக சாதனையை சமன்

- ❖ விக்கெட் கீப்பர்களான ஜாக் ருசெல் (இங்கிலாந்து) மற்றும் ஏபி டி வில்லியர்ஸ் (தென் ஆப்பிரிக்கா) ஆகியோர் ஒரே டெஸ்ட் போட்டியில் அதிக கேட்சுகளைப் பிடித்த சாதனையை இந்தியாவின் ரிஷப் பந்த் சமன் செய்துள்ளார்.
- ❖ இவர் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் 11 கேட்சுகளைப் பிடித்து முந்தைய சாதனையை சமன் செய்தார்.
- ❖ மேலும் இவர் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர்களான நரேன் தம்ஹானே மற்றும் சையத் கிர்மானி ஆகியோரைக் கடந்து ஒரு டெஸ்ட் தொடரின் 20 கேட்சுகளைப் பிடித்த முதல் இந்திய வீரராகவும் ஆனார்.
- ❖ ஆஸ்திரரேலியாவின் பிராட் ஹாடின் ஒரே டெஸ்ட் தொடரில் 29 கேட்சுகளைப் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

## ➢ AFC ஆசிய கோப்பை 2019

- ❖ அபுதாபியில் உள்ள அல் நஹ்யான் விளையாட்டரங்கில் இந்திய தேசியக் கால்பந்து அணியானது வரலாற்றிலேயே முதன் முறையாக தாய்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 4-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
- ❖ ஆசியக் கோப்பை வரலாற்றில் இது இந்தியாவின் மிகப் பெரிய வெற்றியாகும்.
- ❖ இந்திய அணியின் கடைசி வெற்றியானது ஆசியக் கோப்பையில் 1964 ஆம் ஆண்டு இஸ்ரேலில் நடைபெற்ற போட்டியில் ஹாங்காங்கிற்கு எதிராக 3-1 என்ற கணக்கில் தற்செயலாக அமைந்த மிகப் பெரிய வெற்றியாகும்.
- ❖ செட்ரியின் இரண்டு கோல்களானது அவரை ஆசியக் கோப்பையில் அதிக கோல்களை அடித்த வீரராக மட்டுமல்லாது கிறிஸ்டியானா ரொனால்டோவுக்கு அடுத்ததாக தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில் இரண்டாவது அதிக கோல் அடிப்பவராகவும் மாற்றியுள்ளது.

## ➢ ஆஸ்திரேலியாவில் இந்தியாவின் முதலாவது டெஸ்ட் தொடர் வெற்றி

- ❖ இந்திய கிரிக்கெட் அணியானது அண்மையில் ஆஸ்திரேலியாவில் 71 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று பார்டர்-கவாஸ்கர் டிராபியைத் தக்க வைத்துக் கொண்டது.

CHENNAI IAS ACADEMY

- ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை வென்ற முதல் ஆசிய நாடாகவும் ஒட்டு மொத்த அளவில் 5வது நாடாகவும் இந்தியா ஆகியுள்ளது.
- ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை வென்ற முதல் ஆசிய கேப்டனாக விராட் கோலி ஆகியுள்ளார்.

## கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகள்

- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகளில் போட்டியை நடத்தும் மகாராஷ்டிரா மாநிலமானது 15 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி மற்ற மாநிலங்களை விட போட்டியில் முன்னணியில் இருக்கின்றது.
- முதல் மூன்று மாநிலங்கள் பதக்கப்பட்டியலில் 100 பதக்கங்கள் என்ற முத்திரையைக் கைப்பற்றி இருக்கின்றன. இதில் மகாராஷ்டிரா 150 பதங்கங்களைக் கடந்து விட்டது.
- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டில் 10 வயதான அபினவ் ஷா மிக இளைய வயதில் தங்கப்பதக்கம் வெல்லும் நபரானார்.
- தமிழ்நாட்டின் பாலகுமார் நிதின் மற்றும் கர்நாடகாவின் A.T. தானேஸ்வரி ஆகிய இருவரும் 21 வயதிற்கு உட்பட்ட பிரிவில் 100 முதல் 200 மீட்டர்கள் இரட்டையர் எனும் பிரிவில் போட்டியை நிறைவு செய்து இருவரும் நாட்டின் மிக வேகமான வீரர்களாக உருவெடுத்துள்ளனர்.

## 2019 ஆஸ்ரேலியன் ஓபன் - பெடரர்

- ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் ஜனவரி 14-ம் தேதியன்று ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி துவங்கியிருக்கின்றது.
- நடப்புச் சாம்பியனான ரோஜர் பெடரர், ஸ்டெபனாஸ் சிட்சிபாஸ் என்பவரிடம் தோல்வியுற்று 2019 ஆம் ஆண்டின் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.
- இம்முறையில் சிட்சிபாஸ் வரலாற்றில் ஒரு கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்குள் நுழைந்த முதல் கிரீஸ் வீரராகியுள்ளார்.

## சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட மாஸ்டர் சதுரங்கப் போட்டி

- ரஷ்யாவின் கிராண்ட் மாஸ்டர் மேக்சிம் லுகோவ்ஸ்காயைத் தோற்கடித்து ஜார்ஜியாவின் லெவன் பன்சுலையா 11-வது சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் போட்டித் தொடரை வென்றார்.
- இது டெல்லியில் இரண்டு வாராரங்களுக்கு முன்பு நடைபெற்ற டெல்லி ஓபன் போட்டியில் வென்ற லெவனின் இரண்டாவது அடுத்தடுத்த வெற்றியாகும்.
- தமிழ்நாட்டின் M. பிரனேஷ் தனது முதல் சர்வதேச மாஸ்டர்க்கான நிலையை இந்த போட்டியின் போது பெற்றார்.

CHENNAI IAS ACADEMY

## ➢ ஆஸ்திரேலிய ஓபன் 2019

- 4 கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் முதலாவதான ஆஸ்திரேலிய ஓபன் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் முடிவுற்றது.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பின்வருமாறு:

| பிரிவு | வெற்றியாளர்கள் |
|---|---|
| ➢ ஆண்கள் ஒற்றையர் பிரிவு | நோவாக் ஜோகோவிக் (செர்பியா) |
| ➢ பெண்கள் ஒற்றையர் பிரிவு | நோமி ஒஸாகா ஆப் (ஜப்பான்) |
| ➢ ஆண்கள் இரட்டையர் பிரிவு | பியரி - ஹீகெஸ் ஹெர்பெரிட் மற்றும் நிக்கோலஸ் மகூட் (பிரான்ஸ்) |
| ➢ பெண்கள் இரட்டையர் பிரிவு | சமந்தா ஸ்டோசூர் (ஆஸ்திரேலியா) மற்றும் சாங் சுயாய் (சீனா) |
| ➢ கலப்பு இரட்டையர் | பர்போரா கிரேஜிகோவா (செக் குடியரசு) மற்றும் ராஜீவ் ராம் (அமெரிக்கா) |

- ஆஸ்திரேலிய ஓபனில் 7 பட்டங்களை வென்ற முதலாவது நபராக செர்பியாவைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிக் உருவெடுத்துள்ளார்.
- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியைத் தவிர பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் ஆகியவை இதர கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளாகும்.

- பிரான்ஸ் நாட்டின் உன்னதமான சேவைகளுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான 'Legion of Honour' என்ற விருது புத்தாண்டில் கௌரவிக்கப்படுவோர் பட்டியலின்படி, கடந்த ஆண்டு குரோஷியாவைத் தோற்கடித்து உலகக் கோப்பையை வென்ற பிரான்ஸ் அணியின் கால்பந்தாட்ட அணியின் வீரர்களுக்கு வழங்கப்பட்டது.
  - 1998 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற பிறகு 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் 2-வது முறையாக உலகக் கோப்பையை பிரான்ஸ் வென்றது.

CHENNAI IAS ACADEMY

# முக்கிய தினங்கள்

## ➢ DRDO தினம் - ஜனவரி 01

- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது நாடு முழுவதும் உள்ள அதன் ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஜனவரி 01 ஆம் நாள் தனது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- ❖ இந்த DRDO அமைப்பானது நாட்டை ஏவுகணைகள், ரேடார்கள், சோனார்கள் மற்றும் நீர்மூழ்கி ஏவுகணைகள் மற்றும் பல பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றின் தன்னிறைவு அடைந்ததாக மாற்றியுள்ளது.

## ➢ உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04

- ❖ ஐ.நா. சபையானது முதல் அலுவல் பூர்வமான உலக பிரெய்லி தினத்தினை 2019 ஜனவரி 04ஆம் நாள் அனுசரித்தது.
- ❖ கண்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்காக பிரெய்லி முறையைக் கண்டறிந்தவரான லூயிஸ் பிரெய்லியின் பிறந்த நாளினை நினைவு கூறும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## ➢ பாரதீய பிரவாசி தினம் /வெளிநாட்டு இந்தியர் தினம்-ஜனவரி 09

- ❖ வெளிநாட்டு இந்தியர் தினம் அல்லது பாரதீய பிரவாசி தினம் ஒவ்வொரு இரு வருடத்திற்கு ஒரு முறையும் ஜனவரி 09-ம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ 1915 ஆம் ஆண்டு ஜனவரி 09-ம் தேதி தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு மகாத்மா காந்தி வந்தார். மேலும் இந்திய சுதந்திரப் போராட்டத்தைத் தலைமை தாங்கிய மிகப்பெரிய நபரானார்.

## ➢ உலக இந்தி தினம்-ஜனவரி 10

- ❖ ஒவ்வொரு வருடமும் ஜனவரி 10-ம் தேதி உலக இந்தி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இது 1975-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் துவக்கி வைக்கப்பட்டு நடத்தப்பட்ட முதலாவது உலக இந்தி மாநாட்டின் ஆண்டு விழாவாக அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14ம் தேதியன்று அனுசரிக்கப்படும் தேசிய இந்தி தினம் என்பது தேவநாகரி எழுத்து வடிவில் இந்தி மொழியை அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறிக்கின்றது.

CHENNAI IAS ACADEMY

- **தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12**
  - தேசிய இளைஞர் தினம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 12-ம் தேதி இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
  - இத்தினம் சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி எனப்படும் விவேகானந்தரின் பிறந்த தின ஆண்டு விழாவினைக் குறிக்கின்றது.

- **இந்திய ராணுவ தினம் - ஜனவரி 15**
  - 2019 ஆம் ஆண்டு ஜனவரி 15-ம் தேதியன்று இந்திய ராணுவம் தனது 71வது ராணுவ தினத்தைக் கொண்டாடியது.
  - ஒவ்வொரு வருடமும் இந்திய இராணுவம் ஜனவரி 15-ம் தேதியை ராணுவ தினமாக அனுசரிக்கின்றது. ஜெனரல் (பின்னாளில் பீல்டு மார்ஷல்) K.M.கரியப்பா 1949-ம் ஆண்டில் கடைசியான பிரிட்டிஷ் தலைமை படைத் தளபதியான ஜெனரல் சர் F.R.R. பக்சர் என்பவரிடமிருந்து ராணுவத்திற்கான தலைமை கட்டுப்பாட்டைப் பெற்ற தினத்தைக் குறிப்பதற்காக இந்திய இராணுவம் அதனை ராணுவ தினமாக அனுசரிக்கின்றது.

- **திருவள்ளுவர் தினம் - ஜனவரி 16,2019**
  - 2019 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று, திருவள்ளுவர் தினம் (Thiruvalluvar Day 2019) கடைபிடிக்கப்பட்டது.
  - திருவள்ளுவர் ஆண்டு, 2050, தைத்திங்கள் 2 ஆம் நாள் ஆகும்.

- **47வது மாநில தினம் - ஜனவரி 21**
  - மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் தங்கள் 47வது மாநில தினத்தை 2019 ஜனவரி 21 அன்று கொண்டாடின.
  - 1972 ஆம் ஆண்டு இதே நாளில் வடகிழக்குப் பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி இந்த 3 மாநிலங்களும் முழுமையான மாநிலங்களாக மாறின.

- **தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24**
  - பெண் குழந்தைகளின் மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் குழந்தைப் பாலின விகித நிலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்தியாவில் ஜனவரி 24 ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2019 ஆம் ஆண்டின் தேசிய பெண் குழந்தைகள் தினத்தின் கருத்துருவானது, "எதிர்கால வாழ்க்கைக்காக பெண்களுக்கு அதிகாரமளித்தல்" என்பதாகும்.

- **சர்வதேச கல்விக்கான தினம் - ஜனவரி 24**
  - உலகம் முழுவதிலும் ஜனவரி 24-ம் தேதி சர்வதேச கல்விக்கான தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

CHENNAI IAS ACADEMY

## ➢ தேசிய வாக்காளர்கள் தினம் 2019-ஜனவரி 25

- ❖ தேர்தல் செயல்பாடுகளில் குடிமக்களின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி 9வது தேசிய வாக்காளர்கள் தினத்தை இந்தியா அனுசரித்தது.
- ❖ இந்த ஆண்டிற்கான தேசிய வாக்காளர்கள் தினத்தின் கருத்துருவானது, "எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடாமல் அனைவரையும் உள்ளடக்குதல்" என்பதாகும்.
- ❖ 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டதை நினைவு கூர்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நாடெங்கிலும் தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

## ➢ சர்வதேச இனப் படுகொலை நினைவு தினம்-ஜனவரி 27

- ❖ 2019 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி உலகம் முழுவதும் சர்வதேச இனப் படுகொலை நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட இனப் படுகொலையை இத்தினம் நினைவு கூர்கிறது.

## ➢ உலக தொழுநோய் தினம் - ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை

- ❖ சர்வதேச அளவில் ஹன்சன் நோய் அல்லது தொழுநோய் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் உலக தொழுநோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 2019 ஆம் ஆண்டில் உலக தொழுநோய் தினம் ஜனவரி 27 ஆம் தேதி நிகழ்ந்தது. மேலும் இத்தினம் இந்தியாவில் ஜனவரி 30 (மகாத்மா காந்தியின் நினைவு தினம்) அன்று அனுசரிக்கப்படவிருக்கிறது.

## ➢ குடியரசு தினம் - ஜனவரி 26

- ❖ 2019 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி இந்தியா தனது 70-வது குடியரசு தினத்தைக் கொண்டாடியது.
- ❖ இந்த தினமானது இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த தினமான 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியை கௌரவிக்கிறது. இது இந்தியாவின் ஆளும் ஆவணமாக இருந்த இந்திய அரசுச் சட்டம் 1935-ஐ மாற்றியது.
- ❖ இந்தியாவின் 70-வது குடியரசின் தலைமை விருந்தினர் தென் ஆப்பிரிக்காவின் அதிபர் சிரில் ரமபோஸா ஆவார்.

CHENNAI IAS ACADEMY

## ➢ சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26

- ❖ உலக சுங்க அமைப்பின் முதல் மாநாட்டை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் நாள் சர்வதேச சுங்க தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இவ்வாண்டின் சர்வதேச சுங்க தினமானது "தடையற்ற வர்த்தகம், சுற்றுலா மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிற்காக சிறப்பான எல்லைகள்" எனும் முழக்கத்துடன் கொண்டாடப்பட்டது.

## ➢ 2018 தேசிய நோய்த்தடுப்பு நாள் (National Immunisation Day)- ஜனவரி 28

- 2018 ஜனவரி 28 அன்று தேசிய நோய்த்தடுப்பு தினம் (National Immunisation Day) கடைபிடிக்கப்படுகிறது.

## ➢ தரவு பாதுகாப்புத் தினம் - ஜனவரி 28

- ❖ தரவு தனியுரிமை தினம் என அறியப்படும் தரவு பாதுகாப்புத் தினமானது விழிப்புணர்வை அதிகரிக்கவும் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பை ஊக்குவிக்கவும் உலகின் சில பகுதிகளில் ஜனவரி 28 அன்று அனுசரிக்கப்படுகிறது.

## ➢ மகாத்மா காந்தி 72-ஆவது நினைவு தினம்

- மகாத்மா காந்தியின் 72-ஆவது தினம் (Mahatma Gandhi, 72nd death anniversary 30 January 2019) நாடு முழுவதும் ஜனவரி 30 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

CHENNAI IAS ACADEMY